Registered as a NewsPaper

விலை ரூபா: 10.00



உங்கள் அனைத்துத் தேவைகளுக்கும்

R.V.பந்தல் சேவை

முல்லைச்சாலை, தருமபுரம். T.P:0712-610008 (சி-13860) விநாயகர் வீதி, மயிலிட்டி.

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் 17 | திருவள்ளுவர் ஆண்டு 2037 | மாசி-20 | 04-03-2006 | சனிக்கிழமை | ஓசை-14

# திருமலையில் ஐந்து போராளிகள் கடத்தல் புதிய ஆதாரங்களுடன் புலிகள் முறைப்பாடு

## இராணுவமே கடத்தியமை அம்பலம்

(திருமலை)

**கடந்த பெப்ரவரிமாதம் திருகோணமலைமாவட்டத்தில் காணா மல்போன ஐந்து போராளிகளும் இராணுவத்தினரால் கடத்தப்பட்ட மைக்கு கண்ணால் கண்ட சாட்சிகள் உட்பட புதிய ஆதாரங்களுடன் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் சி.எழிலன் முறைப்பாடு செய்துள்ளார்.**

தனிநேசன், இசையரசன், வேல் மாறன், பகவதன், அரவிந்தன் ஆகிய ஐந்து போராளிகளும் கடந்த பெப்ரவரி மாதம் 25ஆம் திகதி மூதூரின் அதியம்கேணியிலிருந்து இறால்குழி நோக்கிச் சென்று கொண்டிருந்த போது படையினரால் கடத்தப் பட்டிருந்தனர்.

இது தொடர்பில் உடனடியாக போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு விடம் விடுதலைப்புலிகளால் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. எனினும் தாம் அவ்வாறு யாரையும் கைது செய்யவில்லையென போர்

(12ஆம் பக்கம் பார்க்க)

## மாணவர்கள் அச்சுறுத்தல்; போ.நி.க. குழு நேரடி விசாரணை

சாவகச்சேரி இந்துக்கல்லூரி மாணவர்கள் மீதும், பாடசாலை அதிபர். ஆசிரியர்கள் மீதும் படை புலனாய்வாளர்களும், படையினரும் கடந்த சில தினங்களில் மேற் கொண்டுள்ள கொடூரமான அச்சுறுத் தல், மிரட்டல் மற்றும் கல்விச்செயற் பாடுகளுக்கு எதிரான சிறிலங்காப் படையினரின் தொடர் நடவடிக்கை கள் குறித்தும் இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு நேற்று நேரடியாக பாடசாலை சென்று மாணவர்களிடமும் பாடசாலை ஆசிரியர் சமூகத்துடனும் விசாரணை களை நடத்தியுள்ளது நேற்றுக்காலை 10.45 மணியளவில் பாடசாலை சென்ற கண்காணிப்புக்குழு பன்னி ரண்டு மணிவரை பாடசாலை மாண வர்களுக்கு எதிராக படையினர் மேற் கொண்டு வருகின்ற நடவடிக்கை குறித்தும், பாடசாலை அதிபர் என்ற விதிமுறைகளுக்கு மதிப்பளிக்காமல் சிறிலங்காப்படைகள் நடந்து கொண்ட முறை மற்றும் வேம்பிராய் படை தலைமையகத்துக்கு பாடசாலை

(12ஆம் பக்கம் பார்க்க)



## நோர்வே வெளிவிவகார அமைச்சருடன் புலிகளின் பேச்சுவார்த்தைக் குழு சந்திப்பு

### ஜெனீவா பெறுபேறுகள் குறித்து கலந்துரையாடல்

(ஒஸ்லோ)

தமிழீழவிடுதலைப்புலிகளின் பேச்சுவார்த்தைக்குழுவினர் நேற்று நோர்வே வெளிவிவகார அமைச்சரை ஜேம்ஸ் தொல்தெம்பேர்கைச்சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

ஜெனீவாப்பேச்சுவார்த்தையின் பெறுபேறுகள் குறித்து விரிவாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது என விடுதலைப்புலிகளின் பேச்சுவார்த் தைக்குழுவின் ஊடக இணைப்பாளர் நகுலன் தெரிவித்துள்ளார்.

சு.ப.தமிழ்ச்செல்வன் குழுவினர் நேற்றுக் காலை நோர்வேயில் சில முக்கிய சந்திப்புக்களையும் மேற் கொண்டுள்ளதாக நோர்வே தகவல் கள் தெரிவிக்கின்றன.

சு.ப.தமிழ்ச்செல்வன் குழுவினர் நேற்றுக் காலை நோர்வே கிறிஸ்தவ சனநாயக்கட்சியின் குழுவினரைச்

(12ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.இல் திங்களன்று மாணவர்களால் கற்றல் செயற்பாடுகள் பகிஷ்கரிப்பு!

### உயர் கல்வி நிறு. மாணவர் அமையம் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் சிறிலங்கா இராணுவத்தினர் சிவில் நிர்வாகத்தில் தலையிடுவதைக் கண்டித்தும் மாணவர்களும், கல்வியியலாளர் களும் அச்சுறுத்தப்படுவதனைக் கண்டித்தும் எதிர்வரும் திங்கட் கிழமை மாணவர் சமூகம் கற்றல் செயற்பாடுகளை பகிஷ்கரிக்க வுள்ளனர்.

யாழ். மாவட்ட உயர் கல்வி நிறுவனங்களின் மாணவர் அமையம் இதற்கான அழைப்பை விடுத் துள்ளது.

இது தொடர்பாக வெளியிடப் பட்டுள்ள செய்திக் குறிப்பில்,

தமிழ் மக்கள் மீதும், தமிழ் மாணவர்கள் மீதும் தொடர்ந்தும் சிறிலங்கா ஆக்கிரமிப்பு இராணு வமும் யாழ். மாவட்ட சிறிலங்கா ஆக்கிரமிப்பு இராணுவத்தளபதியும் அழுத்தங்களையும், தாக்குதல் களையும் மேற்கொள்வதனை உடன் நிறுத்த வேண்டும். குறிப்பாக, யுத்தம் மூலம் மக்களையும், தமிழ் மாணவர்களையும் அழித்தொழித்த சிறிலங்கா ஆக்கிரமிப்பு இராணுவம்

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஊடக ஒம்புட்ஸ்மனாக அஸ்வர் நியமனம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சியின் முன் னாள் பாராளுமன்ற விவகார அமைச் சராக இருந்த ஏ.எச்.எம்.அஸ்வர் ஊடக ஒம்புட்ஸ்மனாக நியமிக்கப் பட்டுள்ளார். இவர் சனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பாராளுமன்ற விவகார ஆலோசகராக ஏற்கனவே நியமிக்கப் பட்டிருந்தார்.

49 வருடங்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினராக இருந்த அஸ்வர் நாட்டைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகளுக்கும் சமாதான

(12ஆம் பக்கம் பார்க்க)

## டோறாவால் மோதிய கடற்படையினர் மீனவரை கடலில் வீசியெறிந்தனர்

-மாதகல் கடலில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ். வலிகாமம் வடமேற்கு மாதகல் சம்பில்துறை கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த மீன்பிடிப்படகு மீது சிறிலங்கா கடற்படை டோறாப் படகு மோதி மீன்பிடிப்படகை சேதமாக்கியதுடன் படகில் இருந்த மீனவர் ஒருவரை கடற்படையினர் கடலில் தூக்கி யெறிந்துள்ளனர். நேற்று முன்தினமிரவு பத்து மணியளவில் மாதகல் கடலிலிருந்து மூன்று கிலோமீற்றர்கள் தூரத்திலுள்ள சம்பில் துறை கடலில் இவ் அடாவடிச்சம்பவம் கடற் படையினரால் நிகழ்த்தப்பட்டுள்ளது.

மாதகல் கடலில் சிறிலங்கா கடற்படை யினரால் மீன்பிடியில் ஈடுபடுவதற்கு தடை விதிக்கப்பட்ட நிலையில் மூன்று கிலோமீற்றர் கள் தொலைவிலுள்ள சம்பில்துறை கடலில் குறிப்பிட்ட சில கடற்றொழிலாளர்கள் கடலில்

(12ஆம் பக்கம் பார்க்க)

### வலி. வடமேற்கு கடற்பகுதியில்

## கடற்படையின் அடாவடிக்கெதிராக காலவரையறையற்ற போராட்டம்!

(யாழ்ப்பாணம்)

யாழ்- வலிகாமம் வடமேற்குப்பகுதியைச் சேர்ந்த கடற்றொழிலாளர்கள் சிறிலங்கா கடற் படையினரது அட்டூழியங்களைக் கண்டித்து நேற்று தொடக்கம் கால வரையறையின்றிப் பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு வலிகாமம் வட மேற்குப்பிரதேசத்திலுள்ள மாதகல் கடற்பரப்பில் வைத்து இரு கடற்றொழிலாளர்கள் சிறிலங்கா கடற்படையினரால் தாக்கப்பட்டதுடன் அவர்கள் தொழிலுக்கு சென்ற படகும் கடற்படையினரின் டோறா படகினால் விஷமத்தனமாக மோதப் பட்டு சேதமாக்கப்பட்டது.

இது போன்ற கடற்படையினரது அட்டூழியங் கள் இன்று நேற்று மட்டுமின்றி தொடர்ச்சியாக

(12ஆம் பக்கம் பார்க்க)

தமிழீழ மாவட்ட நீதிமன்று-கிளிநொச்சி
*****************************************

வ.இல:-436/05
தன்மை:-காணி
பெறுமதி:- 60000/=

எதிராளி

எதிர்:-சரவணபவானந்தன்
விஜேந்திரகுமார்,
மே/பா.
ச.சிறிகௌரிபாலா,
மக்கள் வங்கி,
கிளிநொச்சி.

**வழக்காளி**
**அப்புத்துரை செல்வரெட்ணம்,**
**வளர்மதி இல்லம், ரயில் வீதி,**
**கொக்குவில் கிழக்கு, யாழ்ப்பாணம்.**

## பகீரங்க அறிவித்தல்

மேற்குறித்த எதிராளிக்கு,
இவ் வழக்கானது வழக்காளியால் உமக்கு எதிராக இந் நீதி மன்றில் காணி உரிமை கோரித் தாக்கல் செய்யப்பட்டுள் ளது. உமக்கான அழைப்புக்கட்டளையை முறை நிறை வேற்றுனர் மூலம் சேர்ப்பிக்க முயன்ற பொழுதும், நீர் அம்முகவரியில் இல்லை என்று முறை நிறைவேற்றுனர் மூலம் அறிக்கை கிடைக்கப்பெற்றமைக்கு ஏதுவாக இப் பகீரங்க அறிவித்தல் உமக்கு எதிராக பிரசுரிக்கப்படுகின்றது. இப் பகீரங்க அறிவித்தல் வெளியாகி 14 நாட்களுக்கிடையில் நீரோ அல்லது உமது நலனில் அக்கறை உடையவரோ மன்றில் தோன்றி தகுதியான சட்டவழி நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும், தவறும் பட்சத்தில் இப்பகீரங்க அறிவித்தலைத் தொடர்ந்து உமக்கு எதிராக ஒருமுக விளக்கம் நடத்தப்பட்டு தொடர் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை இத்தால் உமக்கு அறியத் தரப்படுகின்றது.

இந்த 2006 ஆம் ஆண்டு மாசி மாதம் 24ஆம் திகதி
"மன்றின் கட்டளைப்படி"

(சி.14049)

வரைபு:-..............,
வழக்காளி சட்டவாளர்,
தா.இ.குலசங்கர்,
இரத்தினபுரம் வீதி, கிளிநொச்சி.

திருமதி. ற.தேவதாஸ்,
பதிவாளர்,
தமிழீழ மாவட்ட நீதிமன்று,
கிளிநொச்சி.

## கண்ணீர்க் காணிக்கை

**மண்ணில்**
20
–
11
–
1974



**மனங்களில்**
02
–
03
–
2006

அமரர்
### சின்னத்தம்பி சிவராசா


T-3 ஆம் வாய்க்கால் அரசினர் பண்ணை, கிளிநொச்சியை பிறப்பிடமாகவும் 155 ஆம் கட்டை, கிருஸ்ணபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத் தம்பி சிவராசா (சிவா) 02.03.2006 அன்று காலமானார் அன்னார் காலஞ் சென்ற சின்னத்தம்பி மாரி அவர்களின் அன்புமகனும், சிவகுமார், சிவஞானம் (போராளி-விடுதலை), சிவகுருநாதன் (வருவாய்த்துறை), சிவயோகநாதன் (கியூடெக்), சிவாசினி, சிவரஞ்சினி (கிளி/பாரதிவித்தியாயம்), சிவயோகன் (இனியவாழ்வு இல்லம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் இந்து மதி தனலட்சுமி, மது ஆகியோரின் அன்பு மைத்துனரும் சிவவோஜி, சிவரிலக்ஷன், ஆகியோரின் பெரியதந்தையும், சிவலக்சி, சிவலக்ஷன் ஆகியோரின் சிறிய தந்தையும் ஆவார் அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று 04.03.2006 சனிக்கிழமை 3.00 மணியளவில் கிருஸ்ணபுரம் இந்து மயாணத்தில் நடைபெறும் இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், போராளிகள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கோட்டுக் கொள்கிறோம்.

தகவல்:-
குடும்பத்தினர்.

(7524)

## 1ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

**மலர்வு**
10
–
02
–
1966



**உதிர்வு**
13
–
02
–
2005

### நடராசா பாஸ்கரன் (கரன்)

திதி- 04.03.2006

மனிதரில் மாணிக்கமாய் மாண்புடன் வாழ்ந்த சோதரரே புனித வாழ்வில் புண்ணியங்கள் பல செய்தீர் அருகிருந்தெமக்கு அரும்பணிகள் பல செய்து உயர்வு பெறவைத்த உத்தம தெய்வமே ஓர் ஆண்டு போனதய்யா? ஓராயிரம் ஆண்டு போனாலும் உன் நினைவு மாறாது விழிநீருடன் நிலைத்திருக்கும் தங்கள் ஆத்மா சாந்தி பெற இந் நினைவு மலர்தனை காணிக்கையாக்குகின்றோம்.

தகவல்:-
ந. ஜெயநாதன்,
கோமதி பல் பொருள் வாணிபம்,
155 ஆம் கட்டை கிளிநொச்சி.

தகவல்:-
அப்பா, அம்மா, சகோதரர்கள்,
மைத்துனர், மனைவி, பிள்ளைகள்

(சி.14046)

## வரிவிளம்பரம்

### விற்பனைக்குண்டு
வாக்கியப் பஞ்சாங்கம் மொத்த மாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள வாணிபுத்தகசாலை (பிக்பென்ஸ்) டிப்போ வீதி-கிளி.
(சி.14048)

### தவறிவிட்டது
மோட்டார் சைக்கிளினுடைய திறவு கோல் ஒன்று 20.02.2006 அன்று தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத் தவர்கள் தமிழீழ சுகாதார சேவை யில் ஒப்படைக்குமாறு அன்புடன் வேண்டப்படுகிறீர்கள். (7521)

### தவறிவிட்டது
சமலன் திவ்வியரட்ணம் என்ப வரது மோட்டார் சைக்கிள் 500-1384 (உந்துருளி) பதிவுப் புத்தகங்கள் மல்லாவி வைத்தியசாலைக்கும் சந்தைக குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத் தவர்கள கிளிநொச்சி ஈழநாதம் பணி மனையில் ஒப்படைக்கவும் (7518)


### தவறிவிட்டது
13.02.2006 அன்று புதுக்குடியிருப்பு சந்திக்கும் இரணைப்பாளை வீதிக் குமிடையில் கந்தன் தங்கராசா என்ப வரது தே. அ.அட்டை தவறிவிட்டது கண்டெடுததவர்கள் புதுக்குடியிருப்பு ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கவும் (7428)

### உடன் நாடுங்கள்
பாதணிகள், பாக் (Bags) வகை கள் மற்றும் சிவர்கடிகாரங்கள் Sony "AA" "AAA" பற்ரறிகள் போன்ற வற்றை மொத்தமாகவும், சில்லறை யாகவும் நியாயவிலையில் பெற்றுக் கொள்ள எழிற்சோலை, காலணியகம், கனகபுரம் வீதி, கிளிநொச்சி.
(சி.14047)

### கா[illegible] விற்பனைக்கு
155ஆம் கட்டையில் A9 வீதியி லிருந்து சிறிது தூரத்தில் 1/2 ஏக்கர் காணி விற்பனைக்குண்டு 1/4 ஏக்கராகவும் பிரித்துக் கொடுக்கப்படும் தொடர்புக்கு:- 077-6424349 (7522)

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**தோற்றம்**
09
-
11
-
1938



**மறைவு**
08
-
03
-
2003

**திதி - 04.03.2006**

### வேலுப்பிள்ளை சின்னத்துரை

**(முன்னாள் கிராம சேவை நிர்வாக உத்தியோகத்தர் சமாதான நீதவான் - சத்தியப்பிரமாண மொழி பெயர்ப்பாளர்)**

எங்கள் உயிருக்கு உயிரான அன்பான -இராசுவே
நீ எங்களை முந்திச் சென்று மூன்றாண்டுகள் ஆயிடினும்
எங்களில் மூண்டிருக்கும் துன்பச் சுமையதனைச்
சுமந்திட முடியாமல் தவிக்கின்றோம்.
எங்கள் துன்பச்சுமைதனைமாற்ற
நீயல்லால் யார் உளர் எமக்கு
உங்கள் அந்திமக் கடன் செய்ய
நானிருக்கிறேன் என்பாய் ஆனால்
எங்களை முந்திச் செல்ல மனம் வந்ததேனோ?
உந்தன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

தகவல்:–
இ.தெய்வேந்திரம்,
வீதி அபிவிருத்தித்
திணைக்களம்.
முல்லைத்தீவு. (7514)

**அண்ணன் - வே.தம்பையா,**
**அக்கா - இ.பொன்னம்மா,**
**க.பாக்கியம்**
**மைத்துனி-மனோன்மணி மகாலிங்கம்**
**வாதரவத்தை, புத்தூர்.**

## தேச நிர்மாணம் மற்றும் அபிவிருத்தி அமைச்சு

**யாழ். மாநகர சபைப் பிரதேச நீர் பாதுகாப்பு, கழிவு முகாமைத்துவத் திட்டம்.**
**(நோர்வே அரசாங்கத்தினால் நிதிப்படுத்தப்பட்டது.)**

### கேள்வி அறிவித்தல்–இல:05

யாழ்.மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள புனரமைப்பு வேலைகள்

1. மேற் கூறப்பட்ட திட்டத்தின் கீழ் இதன் கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள புனரமைப்பு வேலைகளை பகிரங்க கேள்விகள் இதன் பின்னகத்து தொழில் தருநராகத் குறிப்பிடப்படும் தேச நிர்மாணம் மற்றும் அபிவிருத்தி அமைச்சின் செயலாளருக்காக யாழ். மாவட்ட செயலாளர்/ அரசாங்க அதிபர் அவர்களால் மூடிப் பொறி வைக்கப்பட்ட கேள்விகள் **'எம்6,எம்7,எம்8'** இக்ராட் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கோரப்படுகின்றன.
2. தகுதி வாய்ந்த கேள்வி கோருவோர் இக்கேள்விகளுக்கான நியதிகளையும் நிபந்தனைகளையும் திடடப்பணிப்பாளர், NORAD, கச்சேரி யாழ்ப்பாணத்தில் பெற்றுக்கொள்ளலாம் தொலைபேசி இல:021-2226752
3. ஒப்பந்த ஆவணங்கள் பெப்ரவரி மாதம் 27 ஆம் திகதியிலிருந்து மார்ச்சு மாதம் 13 ஆம் திகதி வரை மு.ப. 9.30 இலிருந்து பி.ப. 3.00 மணி வரை வேலை நாள்களில் மேற்படி அலுவலகத்தில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூ.500/- செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.
4. மேற்படி வேலைக்குரிய ஒப்பந்தப் பிணை முறிகளுடன் பொறிவைத்த கேள்விகள் இரு பிரதிகளில் தலைவர், மாவட்ட கேள்விச்சபை NORAD, கச்சேரி யாழ்ப்பாணத்திற்கு 2006.03.15 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்பதாக கிடைக்க வேண்டும். அதே தினம் பி.ப.3.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும் கேள்வி கோருபவர்/ அவரது பிரதிநிதி சமூகமளிக்கலாம்.

### விபர அட்டவணை

| இல | புனரமைப்பு வேலைகளின் விபரம் | ஆகக் குறைந்த இக்ராட் பதிவு | மீளளிக்கக் கூடிய ஒப்பந்தப் பிணை முறி |
|---|---|---|---|
| 1. | வீரமாகாளி கோயிலிருந்து ஆரியகுளம் வரை (JPO/WC/CH/01/17) | 07 | 22,000.00 |
| 2. | ஆரியகுளத்திலிருந்து புல்லுக்குளம் வரை (JPO/WC/CH/01/18) | 08 | 18,300.00 |
| 3. | புல்லுக்குளத்திலிருந்து பிரதான வீதி வரை (JPO/WC/CH/01/19) | 08 | 15,000.00 |
| 4. | ஆஸ்பத்திரி வீதியிலிருந்து (கொட்டடி) கடல் வரை (JPO/WC/CH/01/16) | 07 | 33,510.00 |
| 5. | ஆசீர்வாதப்பர் வீதியிலிருந்து ஸ்ரான்லிக் கல்லூரி வரை (JPO/WC/CH/01/15) | 06 | 65,000.00 |
| 6. | நாயன்மார்கட்டு குளத்திலிருந்து ஆசீர்வாதப்பர் வீதி வரை (JPO/WC/CH/01/14) | 07 | 49.200.00 |
| 7. | பருத்தித்துறை வீதியிலிருந்து ஆடியபாதம் வீதி வரை (JPO/WC/CH/01/13) | 07 | 39,000.00 |
| 8. | இலந்தைக்குளத்திலிருந்து வாய்க்கால் வரை (JPO/WC/CH/01/20) | 08 | 16,000.00 |
| 9. | வண்ணான் குளத்திலிருந்து செம்மணி வீதி வரை (JPO/WC/CH/01/21) | 08 | 12,000.00 |
| 10. | நிலவடி நீர்த்தொட்டி (JPO/EM/SW/01/02) | 08 | 5,500.00 |
| 11. | காவலாளியின் அறை (JPO/EM/SW/01/03) | 08 | 5,300.00 |

27-02-2006
மாவட்ட செயலகம்
யாழ்ப்பாணம். (சி.14000)

க.கணேஷ்,
தலைவர், மாவட்டக் கேள்விச்சபை,
மாவட்ட செயலாளர்/அரசாங்க அதிபர்,
யாழ்ப்பாண மாவட்டம்.

# இஸ்ரேலை அங்கீகரிக்க முடியாது; பலஸ்தீன அரசாங்கம் அறிவிப்பு

(பொஸ்கோ)

**இஸ்ரேலை அங்கீகரிக்க வேண்டும் என்ற சர்வதேச ரீதியிலான வற்புறுத்தல் களை நிராகரிப்பதாக பலஸ்தீனத்தில் ஆட்சி அமைத்துள்ள ஹமாஸ் இயக்கம் தெரிவித்துள்ளது.**

மொஸ்கோவில் ரஷ்ய அதி காரிகளும், பலஸ்தீன அதிகாரிகளு நேற்று பேச்சுக்களில் ஈடுபட்டனர். இந்தப் பேச்சுக்கள் மூனறு நாட்கள் இடம்பெறவுள்ளன.

இந்தப் பேச்சு வார்த்தையில் கலந்து கொள்ள முன்பு நேற்று நிருபாகளுக்கு பேட்டியளிக்கையிலேயே அவர்கள் இத் தகவல்களை வெளியிட்டுள் ளனர். ஹமாஸ் அரசியல் பீடத்தலை வர் தலைமையில் சென்ற ஆறு அங் கத்தவர்கள் கொண்ட தூதுக் குழு ரஷ்யாவின் வெளிவிவகார அமைச் சில் நேற்றுப்பிற்பகல் பேச்சுக் களை ஆரம்பித்தது.



செக் குடியரசில் இரண்டாம் உலகப் போரில் உயிர் நீத்த சோவியத் வீரர்களின் கல்லறைக்கு ரஷ்ய அதிபர் புட்டின் அஞ்சலி செலுத்துகிறார்.

# அதி நவீன போர் விமானங்களை இந்தியாவுக்கு வழங்க அமெ.முடிவு

(வோஷிங்டன்)

இந்தியாவுக்கு அதி நவீன போர் விமானங்களை வழங்கவுள்ளதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

இந்திய பாதுகாப்பமைச்சர் பிர ணாப் முகர்ஜி கடந்த யூன் மாதம் அமெரிக்கா விற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்தார். அப்போது பிரணாப் முகர்ஜி-அமெரிக்க அமைச் சர் ராமஸ் பெல்டு இடையே இரு நாட்டு இராணுவ உறவு தொடர்பாக ஒப்பந்தம் ஏற்பட்டது.


இதன் அடிப்படையில் நவீன போர் விமானங்களை இந்தியாவுக்கு வழங்க அமெரிக்கா சம்மதம் தெரிவித்துள் ளது. இது தொடர்பாக அமெரிக்க இரா ணுவ தலைமையகமான பெண்டகன் சார்பில் ஒரு அறிவிப்பு வெளியிடப்பட் டுள்ளது.

அதில் கூறியிருப்பதாவது;

இந்தியாவுக்கு சிலவகை போர் விமானங்களை வழங்க அமெரிக்கா முடிவு செய்துள்ளது. இதன் படி எப்.16, எப். 18 வகை நவீன திறன் கொண்ட விமானங்கள் இந்தியாவுக்கு வழங்கப்படும்.

தொழில் நுட்ப அடிப்படையில் இந்தியாவுக்கு உதவத் தயாராக இருக் கிறோம். இதற்கான ஒத்துழைப்பு குறித்து இந்திய அரசுடன் நடத்தும் பேச்சுவார்த்தைக்குப் பிறகு முடிவு செய்யப்படும்.

இந்தியாவில் பாதுகாப்புக்கு தேவை யானவற்றை உதவவேண்டும் என்பதே எங்களது நோக்கம். அதற்கு எப்போதுமே தயாராக இருக்கிறோம். விமானம் மட்டுமல்ல உலங்கு வானூர்தி கடற்படைக்கப்பல்கள் போனற வற்றை வழங்குவதற்குத் தயாராக இருக்கிறோம் என்று அதில் கூறப்பட் டுள்ளது.



டில்லியில் ஜந்தர் மந்தர் பகுதியில் புஷ் வருகையைக் கண்டித்து நடந்த பேரணியில் உரையாற்றுகிறார் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்டு கட்சியின் பொதுச் செயலாளர் பிரகாஷ்கராத்

உலகின் பக்கம்

# பேருந்தில் தீ விபத்து சீனாவில் 16 பேர் பலி

(பீஜிங்)

சீனாவில் பேருந்தில் ஏற்பட்ட தீ விபத்தில் 16 பயணிகள் உடல்கருகிப் பலியாகியுள்ளனர்.

பேருந்தில் மொத்தம் 42 பயணிகள் இருந்தனர். பலியானவர்களில் பெரும்பாலானவர்கள் ஆண்கள், பெண்கள் மற்றும், குழந்தைகள் ஆவர். தீப்பிடிக்கத் தொடங்கியதுமே பயணிகள் இறக்கப்பட்டதால் ஏனையவர்கள் உயிர் தப்பினர். சீனாவில் தான் உலகிலேயே அதிகமானவர்கள் சாலை விபத்துக்களில் பலியாகி வருவதாக புள்ளி விவரம் கூறுகிறது. அங்கு கடந்த ஆண்டில் ஒரு இலட்சம் பேர் இறந்தனர். அதாவது நாள்தோறும் 270 பேர் பலியாகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.



கராச்சியில் அமெரிக்க துணைத் தூதரக அலுவலகம் அருகே குண்டு வெடித்ததால் லாகூரிலுள்ள அமெரிக்க துணைத் தூதரக அலுவலகத்திற்கு இராணுவப் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

# யாருடன் கூட்டணி அமைப்பது இரண்டு நாட்களில் முடிவு அறிவிப்பேன்

—வைகோ தெரிவிப்பு

(சென்னை)

யாருடன் கூட்டணி அமைப்பது என்பது குறித்து இரண்டு நாட்களில் நல்ல முடிவு அறிவிப்பேன் என ம.தி.மு.க நிர்வாகிகளிடம் வைகோ உறுதியளித் துள்ளார்.ம.தி.மு.க வருகிற சட்டசபைத் தேர்தலில் தி.மு.க கூட்டணியில் நீடிக்குமா? அல்லது அ.தி.மு.க வுடன் கூட்டணி சேருமா? என்ற சர்ச்சை எழுநதது. இதையடுத்து ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோ தி.மு.க கூட்ட ணியில் நீடிப்பதாக அறிவித்தார். இதனால் இந்தப் பிரச்சினைக்கு முற்றுப் புள்ளி ஏற்படும் என்று கருதப்பட்டது.

ஆனால் மீண்டும் ம.தி.மு.க வின் கூட்டணி சர்ச்சை கிளம்பியுள்ளது இதன் காரணமாக திருச்சி தி.மு.க மாநாட்டில் வைகோ அலங்கார வளைவுகள், ம.தி.மு.க கொடிகள் அகற்றப்பட்டதால் பெரும் பரபரப்பு நிலவி வருகிறது.

இந்த நிலையில் தேனியில் ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொண்ட வைகோ மதுரை விமான நிலையம் வந்தார். அங்கு நிர்வாகிகளிடம் வைகோ சுமார் 30 நிமிடம் ஆலோசணை நடத்தினார். அப்போது நிர்வாகிகள், தொண்டர்கள் மத்தியில் நிலவி வரும் கருத்துக்கள் மற்றும் எதிர்கால கட்சி வளாச்சி குறித்துப் பேசினார். தேர்தல் கூட்டணி குறித்துத் திருச்சி தி.மு.க. மாநாட்டில் கலந்து கொள்வது பற்றியும் வைகோ நிர்வாகிகளிடம் அலோசணை நடத்தினார்.

# 22 தொகுதிகளை ஏற்றால் மட்டுமே ம.தி.மு.க.வுடன் கூட்டணி

-கருணாநிதி நிபந்தனை விதிப்பு

(திருச்சி)

இருபத்தியிரண்டு தொகுதிகளை ஏற்றுக் கொண்டால் மட்டுமே ம.தி. மு.க.வுடன் கூட்டணி என்று கருணா நிதி நிபந்தனை விதித்துள்ளார். நிருபர்களுக்கு பேட்டியளித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ம.தி.மு.க.வுடன் பேசுவது பற்றி பல்வேறு கருத்துக்கள் வெளிவருகி றது. மற்றக் கட்சிகளுடன் பேசும் பேச் சுப் பற்றி தவறான தகவல்கள் வெளி யானால் அந்தக் கட்சித்தலைவர்கள் உடனடியாக மறுத்து அறிக்கை விட்டு வருகிறார்கள்.

இந்திய கம்யூனிஸ்ட்டு கட்சிக்குத் தொகுதிகள் குறைத்துக் கொடுப்பதாக செய்திகள் வெளிவந்த பேது வரதரா ஜனும, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்டு கட் சிக்குத் தொகுதி எண்ணிக்கை குறைத் துக் கொடுப்பதாக தவறான தகவல் வெளியானதும் தா.பாண்டியனும் மறுத்து அறிக்கை வெளியிட்டார்கள்.

ஆனால் ம.தி.மு.க.வால் தொகுதி எண்ணிக்கை பற்றி செய்திகள் தவ றாக வந்தபோதும் எந்த மறுப்பு அறிக் கையும் கொடுக்கப்படவில்லை.

ம.தி.மு.க.வுக்கு 16 இடங்கள் மட்டுமே கொடுக்கப்பட்டிருப்பதாக செய்தி வெளியிடப்பட்டுள்ளது. நாங்கள் ம.தி.மு.க.வுக்கு 22 தொகு திகள் வரை தருவதா கக் கூறியி ருக்கிறோம்.

நாங்கள் இதன் மேல் தர இயலாது என்று கூறியாருக்கிறோம். கடந்த தேர்தலில்மதி. மு.க.இல்லாத நிலையில் ஜெயலலிதா ஒரு கூட்டணியை உருவாக்கி 140 தொகுதிகளில் போட்டியிட்டு 132 தொகுதிகளில் வெற்றி பெற்றார்.

நாங்கள் அப்படி 140 தொகுதி களை வைத்துக் கொண்டு பிடிவாதம் செய்யவில்லை.பத்து அல்லது 15 தொகுதிகளைத் தியாகம் செய்யவும் தயார் என்ற அளவில் பேசி இருக்கி றோம். கூட்டணிக் கட்சிகள் தான் ஒத் துகொள்ள வேண்டும் எனத் தெரி வித்தார்.



திருச்சியில் நேற்று தி.மு.க. மாநில மாநாடு தொடங்கியது. மாநாட்டையொட்டி சாலையில் வைக்கப்பட்டிருந்த அலங்காரவளைவைப் படத்தில் காணலாம்.

# ம.தி.மு.க.கட்சியின் எதிர்காலம் கருதி அ.தி.மு.க. கூட்டணியில் வைகோ சேரவேண்டும்

-காளிமுத்து மீண்டும் அழைப்பு

(சென்னை)

"ம.தி.மு.க. கட்சியின் எதிர்காலம் கருதி அ.தி.மு.க.கூட்டணியில் வைகோ சேரவேண்டும்" என்று காளி முத்து மீண்டும் அழைப்பு விடுத்துள் ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பதில்:- பாராளுமன்றத் தேர்தல் வேறு சட்டசபைத்தேர்தல் வேறு என்பதை 1980ஆம் ஆண்டே தமிழக மக்கள் நிலைநிறுத்தியுள்ளனர். இப் போதும் அதை நிலைநிறுத்திக் காட்டு வார்கள்.

ம.தி.மு.க வின் எதிர்காலம், அதன் மூலமாக தமிழக மக்களுக்குக் கிடைக்கும் பலன் ஆகியவற்றை கருதிதான் மீண்டும் அவரை அ.தி. மு.க. அணிக்கு வரவேண்டும் என்று உறவோடு, உரிமையோடு அழைக்கி றேன்.

தி.மு.க. கூட்டணியோ பறவைச் காய்ச்சல் கண்ட கோழிப் பண்ணை போல பரிதாப நிலையில் காட்சி அளிக் கிறது. நான் வருத்தப்படுவது எல்லாம் சகோதரர் வைகோவை நினைத்துத் தான்.

ராமாயண இந்திரஜித்தை போலவும், மகாபாரத அபிமன்யூபோல வும் அவரது நிலையுள்ளது எனத் தெரிவித்தார்.

# புலமைப்பரிசில் தேர்வில் 100 புள்ளிகளுக்கு மேல்பெற்ற மாணவர்களுக்கு ஊக்குவிப்பும், பாராட்டும்

(நமது நிருபர்)

**பூநகரிக்கோட்ட பாடசாலைகளில் தரம்-5 புலமைப்பரிசில் தேர்வில் 2004 ஆம், 2005ஆம் ஆண்டுகளில் 100 புள்ளிகளுக்குக் கூடுதலாகப் பெற்றுக் கொண்ட மாணவர்களுக்கான ஊக்குவிப்பும், பாராட்டும் நேற்று முன்தினம் காலை 10.00 மணியளவில் முழங்காவில் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.**

கிளிநொச்சி கல்வி மேம்பாட்டுப் பேரவைச் செயலாளர் தி.அபராஜிதன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் மங்கல விளக்கினை வலயக் கல்விப் பணிப்பாளர்



படம்:-செல்வரசன்

குருகுலராஜா, தமிழீழ வைப்பக ஆளுகை மேலாளர் பாலகிருஸ்ணன், கிளிநொச்சி கல்விக்கழகப்பொறுப்பாளர் கவியன்பன் ஆகியோர் ஏற்றிவைத்தனர். தமிழீழதேசியக் கொடியினை தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் நளன் ஏற்றிவைத்தார். பொதுச்சுடரினை வணிக ஒன்றிய பணிப்பாளர் வெற்றியரசன் ஏற்றிவைத்ததைத் தொடர்ந்து முழங்காவில் மகாவித்தியாலயத்தின் மாணவனும் மாணவர் படையில் முதல் மாவீரனுமான வீரவேங்கை அனுஜன் அவர்களின் திருவுருவப்படத்திற்கு ஈகச் சுடர் ஏற்றிமலர் மாலை அணிவிக்கப்பட்டது.

தொடர்ந்து வரவேற்புரையினை பூநகரி கோட்டக் கல்விப் பணிப்பாளர் கணபதிப்பிள்ளை நிகழ்த்தினார். முழங்காவில் மகாவித்தியாலயத்தின் மாணவிகளின் வரவேற்பு நடனத்தினைத் தொடர்ந்து சிறப்புரைகள் நடைபெற்றன.

தொடர்ந்து பணப்பரிசில்களும் பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. இதில் 2005 ஆம் ஆண்டுக்கான பரிசில்களை வணிக ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இளவேனில் வாணிபமும், 2004 ஆம் ஆண்டுக்கான பரிசில்களை கிளிநொச்சி வலயக் கல்விப்பணிப்பணிமனையும், கிளிநொச்சி இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினரும் வழங்கியிருந்தனர்.

இந்நிகழ்வில் தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் இளங்குமரன் மற்றும் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (செ)

# பள்ளிச்சேமிப்பு அலகு திறந்துவைப்பு

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி மகாவித்தியாலயத்தில் தமிழீழ வைப்பகத்தினரால் பள்ளிச் சேவை அலகு திறந்துவைப்பு நிகழ்வானது கடந்த புதன்கிழமை காலை 10.00 மணிக்கு பாடசாலையின் வளாகத்தில் அமைக்கப்பட்ட கட்டடத்தினுள்



பாடசாலையின் முதல்வர் க.கனசிங்கம் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பொதுச் சுடரினை கல்விக்கழக துணைப் பொறுப்பாளர் க.அருள் மாஸ்ரர் ஏற்றிவைக்க, தேசியக் கொடியினை தமிழீழ வைப்பகத்தின் பணிப்பாளர் வி.சோழமறவன் ஏற்றிவைத்தார். தொடர்ந்து பாடசாலைக் கொடியினை பாடசாலையின் முதல்வர் க.கனசிங்கம் ஏற்றிவைக்க, மங்கல விளக்கினை வட்டக்கச்சி அருட்தந்தை ம.கியூபேட்அன்ரனி, பாடசாலையின் அபிவிருத்திச் சங்க உறுப்பினரும் பெற்றோருமான வன்னிவேளான் தொழில்நுட்பப் பிரிவின் பணிப்பாளர் சி.புவனேஸ்வரன், தமிழீழ வைப்பகத்தின் முதன்மை உள்ளக கணக்காய்வாளர் சு.ரவீந்திரன், தமிழீழ வைப்பகத்தின் ஆளுகை மேலாளர் சி.பாலகிருஸ்ணன் ஆகியோர் ஏற்றிவைத்தனர். தொடர்ந்து பள்ளிச் சேமிப்பு அலகுக் கட்டடத்துக்கான பெயர்ப் பலகையினை தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் நளன் திரைநீக்கம் செய்ய, கட்டடத்தின் நுழைவாயிலை முதன்மை விருந்தினரான கிளி.மாவட்ட உதவிவிவசாயப் பணிப்பாளர் நடாவை வெட்டித் திறந்துவைத்தார்.

அத்தோடு முதல் கணக்கினை தமிழீழ கல்விக்கழகதுணைப்பொறுப்பாளர் அருள் மாஸ்ரர் தொடக்கிவைத்தார். நிகழ்வில் சிறப்புரைகளை கல்விச் கழகத்துணைபொறுப்பாளர் அருள் மாஸ்ரர், வைப்பக ஆளுகை மேலாளர் பாலகிருஸ்ணன், தமிழீழ மாணவர் அமைப்பு பொறுப்பாளர் நளன், கிளிநொச்சி ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் கணேசலிங்கம்,மாணவரின் பெற்றோரான புவனேஸ்வரன், முதன்மைவிருந்தினரான கிளி.மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் ஆகியோர் நிகழ்த்தினார்கள். தொடர்ந்து பணம் வைப்பிலிட்ட மாணவர்களுக்கான வைப்புப் புத்தகங்கள் வழங்கப்பட்டன. (12)

# லெப்.கேணல் நாவரசன் பயிற்சிப்பாசறையின் 6ஆவது தற்காப்பு பயிற்சி நிகழ்வு

(பூநகரி)

பூநகரி பள்ளிக்குடாவில் பள்ளிக்குடா கடற்றொழிலாளர் சங்கத்தினருக்கும், வளர்மதி கடற்றொழில் சங்கத்தினருக்குமான ஆறாவது தற்காப்பு பயிற்சி கடந்த திங்கட்கிழமை பூநகரி கடற்புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் அமுதன் தலைமையில் ஆரம்பமானது.

நிகழ்வில் பொதுச்சுடரினை கடற்புலிகளின் மன்னார் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழன் ஏற்ற, தேசியக் கொடியை தளபதிகளில் ஒருவரான அச்சுதன் ஏற்றினார்.

நாவரசனின் படத்திற்கான ஈகச் சுடரை அமுதன், பயிற்சி ஆசிரியர் ராஜ், வளர்மதி, சங்க உபதலைவர் தங்கராசா ஆகி யோர் ஏற்றினர்.

மலர் மாலையை பள்ளிக்குடா கடற்றொழில் சங்கத்தலைவர் விஜி, பூநகரி கடற்றொழில் சங்கங்களின் சமாசத்தலைவர் யோ.பிரான்சிஸ் ஆகியோர் அணிவித்தனர் தொடர்ந்து பயிற்சிகள் இடம்பெற்றன. (34)

# அனைத்துலக பெண்கள் தினத்தை முன்னிட்டு பயனாளிகளுக்கு கடன்வழங்கல்

(புதுக்குடியிருப்பு)

அனைத்துலக பெண்கள் தினத்தை முன்னிட்டு முல்லை. பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தால் பயனாளிகளுக்கு கடன்வழங்கும் நிகழ்வு கடந்த புதன்கிழமை இடம் பெற்றது.

முல்லை. பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவன மண்டபத்தில் காலை 10.30 மணிக்கு திட்ட இணைப்பாளர் தலைமையில் ஆரம்பமான நிகழ்வில் 15 பயனாளிகளுக்கு சுய தொழில் ஊக்குவிப்பாக ஒரு இலட்சத்து 90 ஆயிரம் ரூபா மொத்தக் கடனாக வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் ஐந்து பயனாளிகளுக்கு சேமிப்புக் கணக்கில் வைப்பிலிட்டு வழக்கப்பட்டது. இந்நிகழ்வில் மாவட்ட பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவன இணைப்பாளர் கருத்துரைகளை வழங்கினார். (08)






*தமிழ்மொழிக்காப்புக்குழுவில் அங்கம் வகிக்கும் இளவேனில் வாணிப பணியாளர்கள் முழங்காவில்,நாச்சிக்குடாப் பகுதியில் பத்து வயதுக்குட்பட்ட சிறார்களுக்கு தூய தமிழில் பெயர் மாற்றம் செய்யும் நடவடிக்கையில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். நேற்று முன்தினம் முழங்காவில் பிரதேசத்தில் தாமாக முன்வந்து தமது பிள்ளைகளுக்கு பெயர்மாற்றம் செய்யும் பெற்றோர்களைப் படத்தில் காணலாம்.*

*படம்: -செல்வரசன்*

# சமகால அரசியல் கருத்தரங்கு

(மல்லாவி)

இன்றைய சமகால அரசியல் நிலவரம் தொடர்பான கருத்தரங்கும் தற்பாதுகாப்பு பயிற்சி தொடர்பான கருத்தூட்டல் நிகழ்வும் கடந்த புதன்கிழமை காலை 10.30 மணிக்கு முழங்காவில் பிரதேச அரசியல்துறை செயலகத்தில் பிரதேச அரசியல்துறைபொறுப்பாளர் தமிழரசன் தலைமையில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் சிறப்புரையை, தமிழீழ நிர்வாகசேவைப் பொறுப்பாளர் பூவண்ணன் ஆற்றினார். (24)





*யாழ். கண்டி பிரதான வீதியில் பனிக்கர் குளம் பகுதியில் அமைந் திருந்த பாலம் மிகமோசமாக சேதமடைந்துள்ளது. பிரதான வீதியில் அமைந்துள்ள பாலம் சேதமடைந்ததால் இவ்வீதியூடான போக்குவரத்தில் பெரும் சிரமம் ஏற்பட்டுள்ளது. சிதைவடைந்த நிலையிலுள்ள பாலத்தையும் அதனூடாகச் செல்லும் பாரஊர்தியையும் படத்தில் காணலாம்.* (படம்:-அ.லோகீசன்)

# வடமராட்சி கிழக்கில் சிறுவர்களுக்கான பொழுதுபோக்கு மைய கலை நிகழ்வு

(அலுவலக செய்தியாளர்)

யாழ். வடமராட்சி கிழக்கு வத்திராயனில் சிறுவர் பொழுதுபோக்கு மையங்களுக்கிடையிலான கலைத் திறன்களை வெளிப்படுத்தும் கலை விழாப் போட்டி நிகழ்வொன்று கடந்த சனிக்கிழமை அன்று இடம் பெற்றுள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனத்தின் ஏற்பாட்டிலும் யுனிசெவ் நிறுவனத்தின் நிதிப்பங்களிப்புடனும் உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனத்தின் செயலாளர் திருமதி.செ.சோமசுந்தரம்பிள்ளை தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது.மங்கல விளக்கேற்றலைத் தொடர்ந்து தேசியக் கொடி, தமிழர் புனர்வாழ்வுக்கழகக் கொடி என்பன ஏற்றிவைக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து வரவேற்புரை, ஆசியுரைகள் என்பன இடம்பெற்றன. இந்நிகழ்வுகளையடுத்து சிறுவர்களின் கலைநிகழ்வுப் போட்டிகள் ஆரம்பமாகின. இதில் 16 பொழுதுபோக்கு சிறுவர் மையங்கள் கலந்து கொண்டு சிறப்பித்தன. இவற்றுள் மிகவும் திறமையாகவும், கருத்தூட்டலாகவும் தங்களது கலைத்திறன்களை வெளிப்படுத்திய தாளையடி பொழுதுபோக்கு மையம், ஆழியவளைப் பாடசாலைப் பொழுதுபோக்கு மையம், செம்பியன்பற்று பொழுதுபோக்கு மையங்களென மூன்று மையங்களுக்கும் முறையே 3000/=, 2000/=, 1000/= எனப் பணப் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டன. பங்குபற்றிய ஏனைய பொழுதுபோக்கு மையங்களுக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

வடமராட்சி கிழக்குப் பிரதேசமானது சுனாமிப் பேரனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் ஒன்றாகும்.

இங்குள்ள சிறுவர்களுள் பலர் உடல்,உளரீதியாக வெகுவாகப் பாதிக்கப்பட்டே காணப்பட்டனர். இப்பாதிப்புக்களிலிருந்து அவர்களை விடுவிக்கும் பொருட்டு தமிழர்புனர்வாழ்வுக் கழகத்தால் முன்னெடுக்கப்பட்டுவருகின்ற செயற்றிட்டங்களில் ஒன்றாகவே நடாத்தப்பட்ட கலைவிழா நிகழ்வுகளும் விளங்குகின்றன. (கு)

# மகளிர் தினத்தை முன்னிட்டு பிரதேச ரீதியான கருத்தரங்குகள்

(அலுவலக செய்தியாளர்)

சர்வதேச மகளிர் தினம் மார்ச் 8 ஐ முன்னிட்டு வவுனியா மாவட்ட பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தினால் தற்போது வவுனியா மாவட்டத்தில் பிரதேச ரீதியாக கருத்தரங்குகள் நடாத்தப்பெற்று வருகின்றன.

இதனடிப்படையில் கடந்த திங்களன்று நெடுங்கேணி பிரதேச பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவன பிரதேச இணைப்பாளர் சி.றாஜினி தலைமையில் நெடுங்கேணி பொதுநோக்கு மண்டபத்தில் நிகழ்வுகள் நடைபெற்றன.

இந்நிகழ்வில் பெண்களும், சட்டமும் எனும் ஆய்வரங்கினை தமிழீழ காவல்துறை மகளிர் விவகாரப் பொறுப்பாளர் இமாக்குலேற் நடாத்தினார். இந்நிகழ்வில் 60 இற்கும் மேற்பட்ட பெண்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இதேபோன்ற கருத்தரங்குகள் கடந்தமாதம் 24 ஆம் திகதியன்று கனகராயன்குளம் பொதுநோக்கு மண்டபத்திலும், கடந்த மாதம் 23 ஆம் திகதியன்று புளியங்குளம் பொது நோக்கு மண்டபத்திலும் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## இந்திய இழுவைப்படகுகளால் வடமராட்சி மீனவர் பெரும் பாதிப்பு!

வடமராட்சி கடற்பரப்பில் இந்திய மீனவர்களின் இழுவைப்படகுகள் பல அத்துமீறி நுழைந்து மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டுள்ளதால் இப்பகுதி மீனவர்கள் தமக்கு தொழில் பாதிப்பு அதிகமாக ஏற்பட்டிருப்பதாக குற்றச்சாட்டு தெரிவித்துள்ளனர். திடீரென இக்கடற்பரப்பினில் அத்துமீறி வரும் நூற்றுக்கணக்கான இந்திய மீனவர்களின் இழுவைப்படகுகள் மீன்களை அபகரித்துச் செல்வதுடன் மீன்பிடிவலைகளையும் தாறுமாறாக அறுத்துவிட்டு செல்வதாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

தமக்கு ஏற்பட்டுள்ளபாதிப்புக்கள் குறித்து மீனவர்கள் வடமராட்சி கடற்தொழிலாளர் சமாசம் ஊடாக யாழ். அரசஅதிபர் மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கவனத்திற்கு கொண்டு வந்தனர். (28)

## முகமாலை இரகசிய விசாரணைக் கூடங்களை அகற்றுமாறு மக்கள் கோரிக்கை

முகமாலை இராணுவச் சோதனைச் சாவடியில் படையினர் புதிதாக அமைத்துள்ள இரகசிய விசாரணை அறைகளை அகற்ற வேண்டும் என்று பொதுமக்கள் கோரியுள்ளனர்.

இரகசிய மறைவிடங்கள் போன்று அமைக்கப்பட்டுள்ள இவ் அறைகளில் வைத்து பொதுமக்கள்,இளைஞர்கள் , யுவதிகள் தொடர்ந்தும் அச்சுறுத்தப்பட்டு வருவதுடன் தமக்கு தகவல்களை வழங்குமாறு படையினர் பொதுமக்களை அச்சுறுத்தி நிர்ப்பந்திப்பதாகவும் இச் செயற்பாடுகளில் நன்கு தமிழ் பேசும் படைப் புலனாய்வாளர்கள் ஐந்துக்கும் மேற்பட்டவர்கள் தற்பொழுது ஈடுபட்டுள்ளதாகவும் இவர்கள் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளில் நீண்ட காலம் பணியாற்றிய படைப்புலனாய்வாளர்கள் என்றும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். (28)

## இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயத்தை அகற்றி மீள்குடியேற்றத்தை மேற்கொள்ளக் கோரிப் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

**யாழ்.வலிகாமம் வடக்கு பிரதேசத்திலுள்ள இராணுவ அதி உயர்பாதுகாப்பு வலயத்தை அகற்றி அங்கு பொது மக்களை மீளக் குடியமர அனுமதிக்குமாறு கோரி பாரியளவிலான வெகுஜன போராட்டங்களை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றது.**

அரசுக்கும்-புலிகளுக்குமிடையிலான பேச்சுக்கள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இப் பேச்சுக்களில் பொது மக்களது இயல்பு, வாழ்வு மீள்குடியமர்வு இராணுவ நெருக்கடிகளைத் தவிர்த்தல் போன்ற பல்வேறு விடயங்கள் முக்கியமாக பேசப்பட்டுள்ளபோதும் தமிழ் மக்களின் இயல்புவாழ்வினையும் மீள் குடியமர்வினையும் சாத்தியமானதாக்கும் நடவடிக்கைகளினை முன்னெடுப்பதில் அரசு பின்னிற்கிறது. அரசு தனது படைக்கட்டுமானங்களின் பாதுகாப்பை மாத்திரம் கவனத்தில் கொண்டு தமிழ்மக்களின் வாழ்வியல் பிரச்சினையுடன் தொடர்ந்தும் விளையாடுகின்றது.

அரசின் இத்தகைய போக்கைத் தொடர்ந்தும் ஏற்றுக்கொள்ள முடியாது எனத் தெரிவிக்கும் வலிகாமம் வடக்கு மக்கள் வலிகாமம் வடக்கு இராணுவ அதிஉயர் பாதுகாப்பு வலயத்தால் தாம் எதிர்கொள்ளும் மீள்குடியமர்வு மற்றும் இயல்வு வாழ்க்கைப் பிரச்சினைகளை சர்வதேச அரங்கிற்கு தெரியப்படுத்தும் வகையில் இப்போராட்டங்களை முன்னெடுக்கப் போவதாகத் தெரிவித்துள்ளனர். (33)

## பனை,தென்னை ஓலைகளை வெட்டி அழிக்கும் படையினர்

தென்மராட்சிப் பிரதேசத்தில் பொதுமக்களின் காணிகளில் இருந்து பயன்தரும் மரங்களான தென்னை, பனை ஓலைகள் பல நூற்றுக் கணக்கான மரங்களில் இருந்து வெட்டி படையினர் தமது முகாம்களுக்கு கனரக வாகனங்களில் எடுத்துச் செல்வதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

யாழ்குடா நாட்டின் படைமுகாம்களைச் சுற்றிலும், உருமறைப்பை செய்வதற்கென்றே படையினரால் பயன் தரும் மரங்களில் இருந்து பனை, தென்னை ஓலைகள் வெட்டப்படுவதாகவும், ஏற்கனவே படையினரால் வெட்டி அழிக்கப்பட்டது போக எஞ்சியுள்ள மரங்களில் இருந்தே தற்பொழுது ஓலைகள் படையினரால் வெட்டப்படுவதாகவும், தெரிவிக்கப்படுகின்றது. (28)

## பெருமெடுப்பில் பலப்படுத்தப்பட்டு வரும் உயர் பாதுகாப்பு வலய முன்னரங்க நிலைகள்

யாழ்.வலிகாமம் வடக்கு இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயத்தின் முன்னரங்க நிலைகள் பெருமெடுப்பில் பலப்படுத்தப்பட்டு வருகின்றன.குறிப்பாக வலிகாமம் வடக்கு பாதுகாப்பு வலயத்தின் முன்னரங்கநிலைகள் உள்ள சேந்தான்குளம்,தெல்லிப்பளை,கட்டுவன், வளலாய் போன்ற பகுதிகளில் இவ்வாறான பலப்படுத்தல் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. இதில் இராணுவத்தினர் புல்டோசர்கள் மூலம் மண் அணைகளைப் பலப்படுத்தி வருவதுடன் முட்கம்பி வேலிகளை புனரமைத்து அவற்றில் மின்பாயவிடுதல் மற்றும் காவலரண்களை புதிதாக அமைத்தல் மற்றும் பழைய காவலரண்களை புதுப்பித்தல் போன்ற நடவடிக்கை களிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

என்றுமில்லாதவாறு இராணுவத்தினர் கடந்த சில தினங் களாக மேற்கொண்டுவரும் இந் நடவடிக்கைகளால் வலிகாமம் வடக்கு முன்னரங்க நிலைகளை அண்டிய பிரதேசங்களில் மீள் குடியமர்ந்து வாழும் மக்களிடையே யுத்த பீதி ஏற்பட்டுள்ளது. (33)

## அத்துமீறும் இந்திய மீனவர் மீது சிறி. கடற்படை பாராமுகம்!

யாழ். வடமராட்சிக்கடற்பரப்பில் தொடர்ச்சியாக இந்திய மீனவர்கள் அத்து மீறி மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருவதாக தெரிவித்துள்ள வடமராட்சி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இந்திய மீனவர்கள் அண்மைக்காலமாக மேற்கொண்டு வரும் இத்தகைய அத்துமீறல் நடவடிக்கைகளை கட்டுப்படுத்த சிறிலங்கா கடற்படையினர் எந்த விதமான நடவடிக்கைகளையும், எடுக்காதிருப்பதாக குற்றம் சாட்டியுள்ளனர்.

இந்திய மீனவர்கள் அத்துமீறிப் புரியும் அராஜகங்களால் வடமராட்சி மீனவர்கள் தொழில் மற்றும் உடமை ரீதியாக பலவித பாதிப்புக்களை எதிர்கொள்கின்றது மட்டுமன்றி இலங்கை கடற்பிராந்திய இறைமையை மீறி இலங்கை மீனவர்களுக்கு உரித்தான கடல் வளங்களை இந்திய மீனவர்கள் சுரண்டிச் செல் கின்றனர். எனினும், இது குறித்து எதுவித கவனமும், எடுக்காது வெறுமனவே தமிழ் மீனவர்களது சுதந்திரமான தொழில நடவடிக்கை களை பாதிப்படையச் செய்வதை மட்டுமே நோக்கமாகக் கொண்டு சிறிலங்கா கடற்படை செயற்பட்டு வருவதை சுட்டிக் காட்டியுள்ள வடமராட்சிக் கடற் றொழிலாளர் சங்கங்கள் இது குறித்து விசனமும், தெரிவித்துள்ளனர். (33)

## யாழ். குடாநாட்டில் அதிகரித்து வரும் சிறுவர் உரிமை மீறல் சம்பவங்கள்

### -மனித உரிமை ஆணைக்குழு தெரிவிப்பு

யாழ்.குடாநாட்டில் அண்மைக் காலமாக சிறுவர் உரிமை மீறல் சம்பவங்கள் அதிகரித்து வருவதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினர் தெரிவித்துள்ளனர்.

யாழ்.குடாநாட்டில் சிறுவர் உரிமைகளைப் பேணுவதற்காக உள்ளூர் அமைப்புக்கள், தொண்டர் அமைப்புக்கள்,சர்வதேச அமைப்புக்கள் என ஏராளமான நிறுவனங்கள் செயற்பட்டுவருகின்றன.

எனினும் இவற்றின் செயற்பாடுகள் திறன் மிக்கதாக இல்லாத காரணத்தினால் யாழ்.குடாநாட்டில் சிறுவர் உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்ந்து இடம்பெற்ற வண்ணமே உள்ளன.

அந்த வகையில் கடந்த ஆண்டில் மாத்திரம் 150 இற்கும் மேற்பட்ட சிறுவர் உரிமை மீறல் சம்பவங்கள் யாழ்.குடாநாட்டில் நிகழ்ந்துள்ளன. இவற்றில் 85 இற்கும் அதிகமானவை சிறுவர் உரிமைகளை மிக மோசமாகப் பாதிக்கும் வகையிலான குற்றச்சாட்டுகளாகவுள்ளன.

எனினும் குடாநாட்டில் தொடர்கின்ற சிறுவர் உரிமைமீறல்களை கவனத்தில் கொண்டு அவற்றை தடுப்பதற்குரிய நடவடிக்கைகளை அரசோ அரசகட்டுமான அமைப்புக்களோ மேற்கொள்ளாமை குறித்து கடும் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (33)

## தென்மராட்சி வைத்தியசாலையில் மருந்துப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு

யாழ். தென்மராட்சி சாவகச்சேரி வைத்தியசாலையில் மருந்துப் பொருட்களுக்கு அவ்வப்போது தட்டுப்பாடு ஏற்பட்டு வருவதாக அவ் வைத்தியசாலையின் அதிகாரிகள் கூறுகின்றனர்.

யாழ்.குடாநாட்டில் மிகப்பெரிய பரப்பளவைக் கொண்ட பிரதேசமான தென்மராடசியில் வாழும் முழு மக்களினதும், வைத்திய தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கான ஒரே ஒரு வைத்தியசாலையாக சாவகச்சேரி வைத்தியசாலை காணப்படுகிறது..

அத்துடன் தென்மராட்சிப் பிரதேசத்தில் மீளக் குடியமர்வோர் தொகை மாதாந்தம் அதிகரித்து வருவதால் இவ்வைத்தியசாலையின் சிகிச்சைகளுக்காக வருவோர் தொகையும், அதிகரித்தே வருகிறது.

எனினும், நாளாந்தம் சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சை பெற வருவோர் தொகை அதிகரித்துள்ள போதும் அத் தொகைக் கேற்றவிதத்தில் வைத்தியசாலைக்கான மருந்துப்பொருள் விநியோகத்தில் காலத்துக்குக் காலம் மாற்றங்கள் ஏற்படுத்தப்படாமை காரணமாகவே இவ்வாறான மருந்துப் பொருள் தட்டுப்பாடு அவ்வப்போது ஏற்பட்டு வருகிறது என வைத்தியசாலை அதிகாரிகள் மேலும் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதன் காரணமாக வைத்திய சிகிச்சை செயற்பாடுகளில் பாதிப்புக்கள் ஏற்படும் நிலைமையும், உள்ளதாக அவர்கள் மேலும் கவலை தெரிவிக்கின்றனர். (33)

## ஈரவலயப் பூமியை பாதுகாத்தல்; மாணவர்களிடையே சுவரொட்டிப் போட்டி

(வலிகாமம்)

எதிர்காலச் சந்ததியின் நாளைய தினத்தை முன்னிட்டு ஈரவலய பூமியை பாதுகாத்தல் அவற்றின் பெறுமதி பற்றி பாடசாலை மாணவர்களூடாக பெற்றோர்களுக்கு உணர்த்தும் முகமாக மத்திய சுற்றாடல் அதிகார சபை அகில இலங்கை ரீதியாக பாடசாலை மாணவர்களிடையே சுவரொட்டிப் போட்டிகளை நடத்தவுள்ளது.

அனைத்துப் பாடசாலைகளிலுமுள்ள தரம் 06-12 வரையான மாணவர்கள் இதில் பங்கு பற்ற முடியும். ஈரவலய பூமியின் உயிரினங்களின் வேறுபாடுகள் மனிதர்களின் செயற்பாடு காரணமாக அழியும், ஈரவலயப் பூமி, ஈரவலயப் பூமியின் இயற்கைப் பெறுமதி ஆகிய தலைப்புக்களில் ஒருவர் ஆகக் கூடியது மூன்று ஆக்கங்களை அனுப்ப முடியும்.பெஸ்டல் வர்ணம், நீல வர்ணம், எண்ணெய் வர்ணம்(Oil Paint) கொலாச் ஆகிய வர்ணங்களைப் பாவித்து 19x24 என்ற அளவில் மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்ப வேண்டும். இலங்கை ரீதியாக முதல் மூன்று இடங்கள் தெரிவு செய்யப்படும். முதலாமிடத்திற்கு பத்தாயிரம் ரூபாவும், இரண்டாம் இடத்திற்கு ஏழாயிரம் ரூபாவும், மூன்றாமிடத்திற்கு ஐந்தாயிரம் ரூபாவும் பரிசாக வழங்கப்படும். மேலும் பத்து திறமையான ஆக்கங்கள் தெரிவு செய்யப்பட்டு சான்றிழ் வழங்கப்படும்.

போட்டியில் பங்கு பற்ற விரும்பும் மாணவர்கள் தமது பெயர் (தமிழில் ஆங்கிலத்தில்) பாடசாலையின் பெயர், முகவரி (தமிழில் ஆங்கிலத்தில்) கல்வி கற்கும் தரம், வயது தேர்ந்தெடுத்த தலைப்பு ஆகியவற்றை எழுதி அதிபரின் உறுதிப்படுத்தலுடன் பிரதிப்பணிப்பாளர் நாயகம், சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்பூட்டல் பிரிவு மத்திய சுற்றாடல் அதிகார "சபை பரிசரபியச" இல 104 றொபட் குணவர்த்தன மாவத்தை, பத்தரமுல்ல என்னும் முகவரிக்கு சுற்றாடல் சுவரொட்டிப் போட்டி 2006 எனக் குறிப்பிட்டு தபாலில் அனுப்பி வைக்கப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (37)


## யாழ்.நீர்வேலியில் படையினர் பாரிய அளவில் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். நீர்வேலிப் பகுதியில் சிறிலங்காப் படையினர் பாரிய எடுப்பிலான பயிற்சி நடவடிக்கையில் ஈடுபட்டு வருவது அப் பகுதி மக்கள் மத்தியில் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

இப் பகுதி வயல்வெளியில் காலை, மாலை வேளைகளில் படையினர் வேட்டுக்களைத் தீர்த்து போர் ஒத்திகைப் பயிற்சி நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.


# கணினி உலகில் இணையம் ஓர் அறிமுகம்



பரந்து விரிந்த உலகினை கைவிரல் நுனிக்கு கொண்டுவந்த பெருமையுடன் பயணிக்கும் இணைய (Internet) தொழில் நுட்பம் பற்றி விளக்கும் நோக்கில் அமைந்த இத் தொடரில் கடந்த வாரம் windows 98 உள்ள கணினியில் எவ்வாறு Internet இனை அமைத்துக்கொள்வது என்ற விபரத்தை பார்த்திருப்பீர்கள் இந்த வாரம் windows xp இல் எவ்வாறு internet இனை அமைப்பது (setup) என்பது பற்றி பார்ப்போம்.

முதலில் கணினியினைத் திறந்து கொள்ளுங்கள் கணினியின் முன்திரை தெரியவரும் இப்போது நீங்கள் இடப்பக்க கீழ் மூலையிலுள்ள start என்ற கட்டளையில் மௌசை முனையினால் கிளிக் செய்கின்ற போது தெரியவரும் துணை மெனுவில் (sub menu) connec to என்பதிலுள்ள show all connections என்ற கட்டளையை பிரயோகிக்கும் போது இன்னுமொரு துணை menu தெரியவரும்.

இவ் menu இல் உள்ள பகுதியில் ஏற்கனவே உள்ள இணைப்புக்கள் காணப்படும். இதில் இடது பக்கத்தில் முதலாவதாக காணப்படும் .create a new connection என்ற கட்டளையை புதிய internet இணைப்பிற்காக நாம் தெரிவு செய்ய வேண்டும். இதனைத் தெரிவு செய்து கிளிக் செய்கையில் தெரியவரும் துணை menuவில்



next என்ற கட்டளையை கொடுக்கும் போது தெரியவரும் துணை menu வில் தெரிவு செய்வதற்கான சில பகுதிகள் காணப்படும். அதில் Internet இணைப்பிற்கான connect to the internet என்பதைத் தெரிவு செய்து மீண்டும் next என்பதை கிளிக் செய்ய வேண்டும்.

இப்போது தெரிகின்ற துணை menu வில் set up my connection manually வில் என்பதைத் தெரிவு செய்ததும் தெரியவரும் துணை menu வில் connect using a dial-up modem என்பதனைத் தெரிவு செய்து தோன்றும் துணை menu வில், ISP name என்ற வெற்றிடத்தில் எந்த internet வழங்குனரின் (isp) குறியீட்டு பெயரை குறிப்பிட வேண்டும்.

இலங்கையில் internet சேவை வழங்குனர்களின் பிரதானமாக காணப்படும் SLTயினரின் பெயரை குறிப்பிடலாம்.

இப்போது இத் துணை menu விலும் காணப்படும் next என்ற கட்டளையை பிரயோகிக்க வேண்டும். இப்போது தோன்றும் துணை menu phone number இனை கேட்கும்.

## இவ்வாற இணையம்




**இப் பகுதியில் இந்த www.puthinam.com என்ற தமிழ் இணையத் தளம் பற்றிப் பார்ப்போம்.**

**ஈழத்தமிழர்களின் மிக முக்கிய தமிழ்ச்செய்தி இணையத்தளமாக காணப்படும். www.puthinam.com இணையத்தளம் ஈழத்து நடப்புச் செய்திகளை உடனுக்குடன் வழங்கி வருவதுடன் அச் செய்திகள் சார்ந்த புகைப்படங்களையும், வெளியிட்டு வருகிறது.**

**இவ் இணையத்தளத்தில் கடந்த ஒருவார கால வெளியீடுகளை பார்வையிடும் வசதியும் பழைய முக்கிய செய்திகள் செவ்விகளை இருபக்க ஓரங்களிலும் பதிப்பித்து வருகின்றது.**

அதில் internet வழங்குனர்களால் வழங்கப்படும் phone இலக்கத்தினை type செய்ய வேண்டும். (உ+ம்= 150) பின்னர் next என்ற கட்டளையை கொடுக்க தெரிய வரும் துணை menu வில் user name (பாவனையாளர் பெயர்) password (இரகசிய குறியீடுகள்) confirm password (மீண்டும் அதே இரகசிய குறியீடுகள்) என்பனவற்றை type செய்து next என்ற கட்டளையை பிரயோகிக்க வேண்டும்.

மீண்டும் தெரிய வரும் துணை Menu இல் Add a Shortcut to this Connection to my desktop என்பதனைத் தெரிவு செய்து Finish என்ற கட்டளையை பிரயோகிக்க



வேண்டும்.

இப்போது இறுதியாக தெரியவரும் துணை Menu இல் User name என்ற இடத்தில் முன்னர் நீங்கள் கொடுத்த பாவனையாளர் பெயரினையும் Password என்ற இடத்தில் முன்னர் கொடுத்த அதே இரகசியக் குறியீடுகளையும், வழங்கி dial என்ற இடத்தில் தொலைபேசி இலக்கத்தினையும், வழங்கி இம் menu வில் கீழ் உள்ள Dial என்ற கட்டளையை பிரயோகிக்க windows xp யில் internet இணைப்பினை ஏற்படுத்த முடியும்.

இவ்வாறாக உங்கள் கணினியில் internet இணைப்பு பெறப்பட்ட பின் கணினி முன்திரையில் உள்ள (Icon-intrernet Explorer என்ற Icon இணை இரு முறைClick செய்து இணையத்தளத்துள் (internet) பிரவேசிக்கலாம்.


இணையத்தளத்தை சாதாரணமாக பயன்படுத்து கின்றவர்களிடம் கட்டாயமாக internet இணைப்பு முறையெல்லாம் தெரிந்திருக்கும் என்றில்லை எனினும் இணைய தளம் பற்றி முழுமையாக அறிய முயலும் ஆர்வலர்கள் நன்மை கருதி internet இணைப்பு முறை பற்றி தந்திருந்தோம்.

அடுத்ததாக இணையத்தை உபயோகிக்க துடிக்கின்ற பயன்படுத்துகின்றவர்களின் நன்மை கருதி இணையத்தள முன்பக்கங்கள் (Home page) கொண்டிருக்கின்ற வசதிகள் குறித்தும் இணையத்தளங்கள் ஊடாக நாம் பெற்றுக்கொள்ளக்கூடிய தகவல்கள், வசதிகள் தொடர்பாகவும் தொடர்ந்து கவனிப்போம்.

(தொடரும்)

ப. துஸ்யந்தன்

# பச்சோந்தி நிறம் மாறுவது ஏன்?



**பஞ்சோந்தி நிறத்தை மாற்றிக்கொள்ளும் தனித்தன்மையைப் பெற்றுள்ளது. அதன் உடலில் பல்வேறு நிறங்களுக்கான அம்சங்கள் உள்ளன. தனது சுற்றுச் சூழலுக்கு ஏற்ப அது நிறத்தை மாற்றிக்கொள்ளும். அவ்வாறு மாற்றிக் கொள்வதன் மூலம் சுற்றியிருக்கும் பூச்சிகள் தன்னைக் காணாதவாறு மறைத்துக் கொள்கிறது. தனக்கு இரையாகக் கூடிய பூச்சிகள் அருகில் வந்தவுடன் "லபக்" என்று பிடித்துக்கொள்ளும் பச்சோந்திகள் நிறம் மாறுவது வயிற்றுக்காகத் தான்.**

# தெரிந்து கொள்ள

*□ நோர்வே நாட்டுப் பாராளுமன்ற வாசலில் மூன்று சிலைகள் இருக்கின்றன. காது வலி, தலைவலி, வயிற்றுவலி– இந்த மூன்றையும், இவை குறிக்கின்றனவாம். அரசியலுக்கு வந்தால் இந்த மூன்றும் நிச்சயம் என்பது இதன் கருத்தாகும்.*

*□ செஷலிஸ் நாட்டுத்தலை நகரான விக்டோரியாவில் ஒரு பெரிய மணிக்கூட்டுக்கோபுரம் இருக்கின்றது. ஒவ்வொரு தடவையும், அதிலுள்ள கடிகாரம் ஒரே மணியை இரண்டு தடவை அடிக்கும் ஏன்? முதல் தடவை எண்ண மறந்து விட்டவர்கள் இரண்டாவது தடவை எண்ணட்டும் என்பதற்காக.*


*□ சான்பிரான்ஸிஸ் கோவில் தங்க வேட்டைக்காக மக்கள் குடியேறிக்கொண்டிருந்த ஆரம்ப காலத்தில் எலிகளின் தொல்லை தாள முடியாததாக இருந்தது. அதற்காக ஐரோப்பா விலிருந்து ஒரு கப்பல் பூனைகளை வரவழைத் தார்கள். ஒரு பூனையின் விலை 20 டொலர்.*

*□ நமது உடம்பின் பொதுவான வெப்பம் என்ன என்று வெகுகாலம் வரை யாருக்கும் சரியாகத் தெரியாமலே இருந்து வந்தது. 1850 ஆம் ஆண்டு வாக்கில், லீப்ஸிக் பல்கலைக்கழகத் தைச் சேர்ந்த டாக்டர் கார்ல் வாண் டர்லிக் என்பவர் ஒரு இலட்சம் பேரைப் பரிசோதனை செய்து சாதாரணவெப்பநிலை 98, 4 டிகிரி பரனைற் என்று நிர்ணயம் செய்தார்.*

*நைல் நதியின் நீர் மட்டம் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு இருக்க வேண்டுமென்பதில் எகிப்தியர்கள் மிகக் குறிப்பாக இருந்து வருகிறார்கள் ஏழாயிரம் ஆண்டுகளாக. நீர் மட்டம் உயரவில்லையெனில் ஒரு கன்னிப் பெண்ணை நதியில் தூக்கிப் போட்டுப் பலி கொடுப்பது வழக்கம். அந்த வழக்கம் இன்றும் இருக்கிறது. ஆனால் உயிருள்ள பெண்ணைப் போடாமல் ஒரு கொடும்பாவி பொம்மையைப் போடுகிறார்கள்.*

*□ ஹாலிவூட் நட்சத்திரமான ஸில்வெஸ்டர் ஸ்டெல்லான் தனது முதல் படத்திற்குப் பெற்ற ஊதியம் 25 ரீ சேட்டுக்கள்.*

*□ அமெரிக்காவின் முதல் சனாதிபதியான ஜோர்ஜ் வோஷிங்டன் பொய்ப்பல் கட்டிக்கொண்டிருந்தார். அது தங்கத்தில் செய்தது அல்ல மரத்தில் செய்தவையாகும்.*



*சுவீடன் நாட்டின் மால்கோ நகரில் கட்டடக் கலைஞர் கலாம் ரெவா யோசனைப்படி அச்சிலிருந்து 90 பாகை திரும்பிய இந்த 54 மாடிக் கட்டடம் கட்டப்பட்டு சமீபத்தில் திறக்கப்பட்டது.*

# தமிழீழ தேசவெற்றியின் பின்னால் இருப்பது வேவுப்புலி வீரரின் கடுமையான உழைப்பே

## தமிழீழ நில அளவைப் பிரிவுப் பொறுப்பாளர் சசிக்குமார்

(அலுவலக செய்தியாளர்)

**தமிழீழ தேசம் வென்றெடுத்த வெற்றிகளின் பின்னால் இருந்த வைகள் எல்லாம் விசேட வேவுப் புலி வீர்களின் கடுமையான உழைப்பே என்று தெரிவித்தார் தமிழீழ நில அளவைப் பிரிவுப் பொறுப்பாளர் சசிக்குமார் அவர்கள்.**

கடந்த புதன் வவுனியா புதூர்ப் பகுதியில் இடம் பெற்ற விசேட வேவுப் பிரிவு மாவீரர்கள் நினைவாக இடம் பெற்ற விளையாட்டு நிகழ்வில் கலந்து சிறப்புரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்:-

1991 ஆம் ஆண்டு ஆகாயக் கடல் வெளிச்சமர் நிறைவடைந்த பின்னர் தான் வேவுப்பணி வலுவடையச் செய்யப்பட்டது. இந்தச் சமர் நிறைவடைந்ததன் பின்னர்தான் எங்கள் இயக்கத்தில் கடற்புலிகளும் விசேட வேவுப் பிரிவும் புதிய உருவாக்கம் பெற்றது. தேசியத் தலைவரின் போரியல் சிந்தனையில் உருவாகிய இராணுவப் பிரிவின் பயிற்சிகள் ஆரம்பமாகியது. ஆரம்பத்தில் தமிழீழத்தின் அனைத்து மாவட்டத்தையும் சேர்ந்த ஆண்,பெண் உட்பட பெருந்தொகையான போராளிகள் பயிற்சி பெற்றனர்.

இந்த நிலையில் லெப்டினனட் ஜெனரல் டென்சில் கொப்பேக்கடுவா யாழ்.குடாநாட்டைகைப்பற்றும் திட்டத்தை வகுத்து "ஒப்பரேசன் கவுண்டவுன்" என்ற படை நகர்வை மேற்கொள்ளத் திட்டமிட்டார். இந்த நேரத்தில் எமது போராளிகளுக்கான பயிற்சிகள் நிறைவடைந்து செயற்பாட்டில் இறக்கப்பட்டார்கள்.

இந்த நடவடிக்கைகள் மூலம் எமக்குப் பெரு வெற்றிகள் வந்து சேரத்தொடங்கியது. பூநகரிப்பகுதியில் லெப். கேணல் பூஞ்சிகேவா என்ற இராணு அதிகாரி உட்பட்ட படையினர் கொல்லப்படுகிறார்கள், அதேபோல கப்டன் பெரேரா கொல்லப்படுகிறார். இப்படியே வளலாய் 91 காவலரண் தகர்ப்பு நடவடிக்கை மண்டைதீவில் விசேட வேவுப்பிரிவும் கடற்புலிகளும் இணைந்து கடற்படையின் 'வோட்டர்ஜெற்' படகைக்கைப் பற்றியமை போன்ற நடவடிக்கைகளை குறிப்பாகக் காணமுடியும்.

இப்படியாக தலைவரின் வழிகாட்டலில் நடவடிக்கைகள் வெற்றிப் பாதையில் நகர்ந்து சென்று கொண்டிருந்தது. இந்த நிலையில் எங்களுக்கான ஒருபெரு வெற்றி கிடைக்கிறது. மேஜர் பீற்றர் தலைமையிலான அணி அந்த வெற்றித் தாக்குதலை மேற்கொண்டது. 'ஒப்ரேசன் கவுண்டவுன்' என்ற குடாநாட்டு முற்றுகைப்படை நகர்வை மேற்கொள்வதற்கான திட்டங்கள் பூர்த்தியாகி அதனை இறுதியாகப் பார்வையிட வந்த லெப்டினனட் ஜெனரல் டென்சில் கொப்பேக் கடுவ, மேஜர் ஜெனரல் விஜய விமலரத்தை போன்ற அதிகாரிகள் உட்பட்ட பல படையினர் கொல்லப்படுகின்றனர். இவர்கள் மீதான தாக்குதல் நடவடிக்கை மேற்கொண்டு வெற்றியடைந்ததன் மூலம் யாழ்குடா நாட்டை படையினர் கைப்பற்றும் பாரியதிட்டத்தை ஏறத்தாள மூன்று ஆண்டுகள் பின்நோக்கி தள்ளியிருந்தோம். 1995 ஆம் ஆண்டு 'ரிவிரெச' நடவடிக்கை வரை அவர்களின் திட்டம் ஒத்தி வைக்கப்பட்டது.



இப்படித்தான் விசேட வேவுப் பிரிவு பல்வேறு பட்டபெருவெற்றிகளுக்கு வழிசமைத்திருந்தது. பூநகரித்தளம் மீதான தாக்குதலுக்குரிய வேவு நடவடிக்கையை விசேட வேவுப்பிரிவு திறமையாக மேற்கொண்டது. இதன் மூலம் எங்கள் இயக்கம் முதல் முதலாக டாங்கிகளைகைப்பற்றியிருந்தது. இது எங்கள் வரலாற்று வெற்றி. ஒவ்வொரு வெற்றிக்கும் பின்னால் வேவுப்புலி வீர்களின் அளவிட முடியாத உழைப்பு இருக்கிறது. இத்தகைய வெற்றிகள் மூலம் கிடைத்தது தான் இன்றைய சமாதானம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (லோ)

# கம்பளை ஆற்றங்கரையில் ஆயுதங்கள் மீட்பு

(கொழும்பு)

கம்பளை வெலிகங்கை எனும் இடத்தில் ஆற்றங்கரையோரம் சில ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன.

கம்பளையில் ஆற்றங்கரையோரம் ஆயுதங்கள் சில இருப்பதாக சிறிலங்கா பொலிசாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றையடுத்து அங்கு சென்று தேடுதல் நடத்திய பொலிசார் ஆற்றங்கரையோரத்திலிருந்து சிங்கப்பூர் தயாரிப்பான கிரனைட் லோஞ்சர் ஒன்றையும் ரி-56 ரகத் துப்பாக்கியின் பாகம், எல்.எம்.ஜி. துப்பாக்கியின் பாகம் மற்றும் பிஸ்டல் ஒன்றின் பாகங்களையும் கைப்பற்றியுள்ளனர்.

இவற்றுடன் ஆறு தோட்டாக்களும், 30 தோட்டாக்கள் அடங்கக்கூடிய தோட்டாக்கள் பட்டியொன்றையும் மீட்டுள்ளனர்.

இவற்றை யார் இங்கு கொண்டு வந்து போட்டார்கள் என்பது பற்றி இதுவரை எவ்விதத் தகவலும் கிடைக்கவில்லை என்றும் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் கம்பளை பொலிசார் தெரிவித்துள்ளனர்.

# சகல அரசதிணைக்களங்களிலும் மக்கள் தொடர்பு அலுவலர்கள்

பொதுமக்கள் திணைக்களங்களுடன் கொண்டுள்ள உறவினை மேலும் வலுப்பெற வைக்கும் முகமாக சகல அரச திணைக்களங்களிலும் மக்கள் தொடர்பு அலுவலகர்கள் நியமிக்கப்படவுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது. மக்கள் நட்புறவுடன் உயர் அரச சேவையினைப்பெறுதல் என்னும் மகிந்த சிந்தனையினை நடைமுறைப்படுத்தும் நோக்கில் மாகாண பொதுநிர்வாக உள்ளூராட்சி, கூட்டுறவு கிராம அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி, கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு பொதுமக்கள் தொடர்பு உத்தியோகத்தர்களை நியமித்துள்ளன.

இதற்கான விபரங்களை அரசு, சகல மாகாண அமைச்சுக்களையும் கோரியுள்ளது. இவ்வாறு சகல திணைக்களங்களிலும் நியமிக்கப்படவுள்ள பொதுமக்கள் தொடர்பு உத்தியோகத்தர்கள் திணைக்களங்களில் சேவை முன்னேற்றம் தொடர்பாக நடவடிக்கைகளை எடுத்தல், பொதுமக்கள் திணைக்களங்களில் இருந்து சேவைகளை பெற்றுக்கொள்ளும் உரிமைகளை உறுதிப்படுத்துதல், பொதுமக்கள் செய்யும் முறைப்பாடுகளுக்கு உடனடியானதும், பயனுறுதிவாய்ந்ததுமான பதிலளித்து நடவடிக்கைகளை மேற்கொள்ளல் போன்ற பணிகளை மேற்கொள்ளவுள்ளனர்.

# ஜெனீவாப் பேச்சுக் குறித்து அரசு பொய்த்தகவல்களை வெளியிடுகிறது

## -ஐ.தே.கட்சி குற்றச்சாட்டு

ஜெனீவாவில் போர் நிறுத்த ஒப்பந்தம் திருத்தப்பட்டுள்ளதாக உண்மைக்குப் புறம்பான தகவல்களை வெளியிட்டு வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல குற்றம் சாட்டியுள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றின் போதே லக்ஷ்மன் கிரியெல்ல இவ்வாறு கூறினார். அவர் அங்கு மேலும் கூறுகையில்; போர் நிறுத்த ஒப்பந்தத்தில் ஏதாவது திருத்தம் செய்வதானால் சனாதிபதி அல்லது பிரதமர் அதில் கைச்சாத்திட வேண்டுமென ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் கிரியெல்ல மேலும் கூறினார். கடந்த தேர்தலுக்கு முன்னர் தாம் அதிகாரத்திற்கு வந்தவுடன் போர்நிறுத்த உடன்படிக்கையை திருத்துவதாக அல்லது நீக்குவதாக அரசியல் மேடைகளில் கூறிவந்தனர். இதனாலேயே தற்போது உண்மைக்கு மாறான தகவல்களை வெளியிட்டு வருகிறார்கள் என்றும் அவர் கூறினார்.

## -நவீன் திசாநாயக்க உள்ளிட்ட

# மூன்று ஐ.தே.க.வினர் அரசாங்கத்தில் இணைவு?

(கொழும்பு)

ஐக்கியதேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான நவீன் திசாநாயக்க உள்ளிட்ட மூன்று பேர் மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்தில் விரைவில் இணையவுள்ளதாக மகிந்தவின் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

நுவரெலியா பாராளுமன்ற உறுப்பினரான நவீன் திசநாயக்க, புத்தளம் ஐக்கியதேசியக்கட்சியின் அமைப்பாளர் நிமால் பெரேரா, இரத்தினபுரி அமைப்பாளர் சுசந்த புஞ்சிநிலமே ஆகியோர் விரைவில் அரசாங்கத்தை ஆதரித்து கட்சி தாவக்கூடும் என்று கூறப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து அரசாங்கம் பக்கம் தாவவுள்ளஇந்த மூவருக்குப் பிரதி அமைச்சுப் பதவிதான் அளிக்கமுடியும் என்று மகிந்த ராஜபக்ஷ கூறியுள்ளதாக தெரிகிறது. ஐ.தே.க விலிருந்து ஏலவே கட்சி தாவிய சிலருக்கு அமைச்சரவையின் உயர் பதவிகள் அளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அனைத்துக்கட்சிக் கூட்டம் ஒத்திவைப்புக்கு ஐ.தே.க கண்டனம்

(கொழும்பு)

ஜெனீவாப் பேச்சுக்கள் தொடர்பான சிறிலங்கா அரசாங்கத்தின் அனைத்துக் கட்சிக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளமைக்கு ஐக்கிய தேசியக் கட்சி கண்டனம் தெரிவித்துள்ளது.அக்கட்சியின் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல கூறியுள்ளதாவது; ஜெனீவாப் பேச்சுக்கள் தொடர்பாக ஜே.வி.பி மற்றும் ஜாதிக ஹெல உறுமயவினருடன் ஒருமித்த கருத்தை எட்ட முடியாத நிலையிலே அனைத்துக் கட்சிக் கூட்டத்தை மகிந்த ராஜபக்ஷ ஒத்தி வைத்துள்ளார். [illegible] சமாதானப்பேச்சுக்கள் தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியானது அரசாங்கத்துக்கு முழு ஒத்துழைப்பை அளித்து வருகிறது என்றார் அவர்.

# பாதகமான அரசியல் சூழலை புலிகள் தமக்கு சாதகமாக மாற்றிக்கொண்டனர்

## -புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே.பாலகுமாரன்



பாதகமான அரசியல் சூழலை தமிழீழ விடுதலைப்புலிகள் ஜெனீவாவில் தமக்கு சாதமாக மாற்றிக்கொண்டனர் என்று தமிழீழ விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் க.வே. பாலகுமாரன் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் திட்டமிடல் செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊரக வளர்ச்சி மேம்பாட்டுப் பேரவை பிரதிநிதிகளுடனான கலந்துரையா டலில் சிறப்புரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது;

மிகவும் மோசமான அரசியல் சூழல் ஜெனீவாவில் இருந்தது. தமிழீழ விடுதலைப்புலிகள் அந்த அரங்கத்திற்குச் சென்று தமக்கு சாதகமாக அரசியல் சூழலை மாற்றினார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். பாதகமான அரசியல் சூழலை எவ்வாறு எமக்கு சாதகமாக மாற்றுவது என்பதுதான் எமது அரசியல். எமக்கு எதிராக இன்று என்ன பாதகமான விடயங்கள் உள்ளன என்று பாருங்கள். தமிழ்த் தேசம் இன்னும் முழுமையாக விடுவிக்கப்படவில்லை. எது சாதகமாகவுள்ளது வன்னி மட்டும் சுதந்திரமாகவுள்ளது. எங்கள் அபிவிருத்திக்குரிய நிறைவான வேலைத் திட்டம் தயாரிக்கப்படவில்லை. நிறைய அறிக்கைகள் மட்டும் எம்மிடம் உள்ளன.

எமது விடுதலைப் போராட்டம் என்பது அரசியல் ஒடுக்குமுறை, பொருண்மிய ஒடுக்குமுறை, பண்பாட்டு ஒடுக்குமுறை, சமூக ஒடுக்குமுறை காரணமாகத் தான் உருவாகியது. இன்று அரசியல் ரீதியான செயற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது பொருண்மிய ரீதியான மேம்பாட்டுக்காக இன்று செயற்றிட்டங்கள் நடத்தப்படுவதன் நோக்கம் என்ன? எங்கள் அரசியல் இலக்குகளைப் புரிந்து கொண்ட உலகம் விபரீதமான முடிவைத் தவிர்க்க வேண்டும் என்பதற்காக பொருண்மிய ரீதியான சுமைகளை குறைப்பதன் ஊடாக மனக்காயங்களை மாற்றலாம் என்ற முடிவுடன் உலகம் வந்து நிற்கின்றது. எமக்கு கிடைக்கின்ற பணங்களும், திட்டங்களும் எமது அரசியல் இலக்குக்கு குந்தகம் இல்லாமல் இருக்க வேண்டும். எமது மண்ணில் செயற்படுத்தும் திட்டங்கள் நல்ல முறையில் செயற்படுத்த வேண்டும் எனவும் தெரிவித்தார்.

முற்பகல் 10.15 மணிக்கு ஆரம்பமான இந்த திட்டமிடல் ஆய்வுப் பட்டறை திட்டமிடல் செயலகப்பணிப்பாளர் ரஞ்சன் தலைமையில் நடைபெற்றது. ஆய்வுப் பட்டறையை தொடக்கி உரையாற்றிய பணிப்பாளர் ரஞ்சன் குறிப்பிடுகையில்; அடிப்படை திட்டமிடல் இல்லாமலேயே மக்களுக்கான அபிவிருத்திகள் பல நிறுவனங்களால் மேற்கொள்ளப்படுகின்றன. இது சரியான தீர்வுகளைத் தராத நிலையில் பயனற்றுப் போகின்றது. எனவே ஊரக அபிவிருத்திகளை ஒருமுகப்படுத்தி முன்னுரிமைப்படுத்தப்பட்டு தேவைகள் மேற்கொள்ள வேண்டிய அவசியம் இருக்கின்றது. சரியான திட்டமிடல் அணுகுமுறைக்கூடாக ஊரக ஒற்றுமையை வளர்க்க முடியு மெனவும் ரஞ்சன் குறிப்பிட்டார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் சகல பிரதேசங்களையும் சேர்ந்த ஊரக வளர்ச்சிப் பணி செயற்பாட்டாளர்கள் சுமார் 150 பேர் வரை இந்த ஆய்வுப் பட்டறையில் பங்கேற்றனர். மேம்பாடு என்பது என்ன? அந்த மேம்பாட்டினை மேற்கொள்ளவது எப்படி? என்பது தொடர்பிலான விளங்கங்களைத் திட்டமிடல் செயலகத்தைச் சேர்ந்த செல்வின் விளக்கினார்.

தற்போது கிராம மட்ட அபிவிருத்தியில் பல்வேறு குறைபாடுகள் நிலவி வருகின்றன. மக்களின் தேவைகள் சரியாக இனங்காணப்படாமை, முன்னூரிமைகளில் பக்கச் சார்பு நிலை, ஒழுங்குபடுத்தப்பட்ட மேம்பாட்டு அணுகுமுறையின்மை, மக்களுக்கான தேவைகள் சரியாகக் கிடைக்காமை உட்பட பல குறைபாடுகள் இனங்காணப்பட்டுள்ளதாகவும் செல்வின் தனது விளக்கவுரையில் குறிப்பிட்டுள்ளார்.

தமது ஊரக மேம்பாடு தொடர்பாக நிகழ்வில் பங்கேற்பாளர்களிடமிருந்தும் கருத்துக்கள் பெற்று சமத்துவமான முன்னோடியான அபிவிருத்தித் திட்டங்களை நிறுவனங்களுக்கு ஏற்றவாறு அல்லாது மக்களுக்கு ஏற்றவாறு எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்துவதே இந்த ஆய்வுபட்டறையின் நோக்கமென திட்டமிடல் செயலகத்தினர் தெரிவித்துள்ளனர்.

# இலங்கை ஜனநாயக சோசலிசகுடியரசு
# பெருந்தெருக்கள் அமைச்சு
# வீதி அபிவிருத்தி அதிகார சபை

# கேள்வி கோரல்கள்

## சர்வதேச ஒத்துழைப்பிற்கான யப்பான் வங்கியின்(JBIC) நிதி வழங்கலின் ஊடாக முல்லைத்தீவு பிராந்திய வீதி, கட்டட புனரமைப்பு வேலைத்திட்டம்

மாகாணப் பணிப்பாளர் வ-கி(வ), வீதி அபிவிருத்தி அதிகாரசபை, வவுனியா அதன்கேள்வி கோரல் சபையின் சார்பாகப் பிரதம பொறியியலாளர் முல்லைத்தீவு வலயத்திற்குட்பட்ட பின்வரும் வேலைகளுக்கு மூடி ஒட்டப்பட்ட கேள்வி கோரல்களைப் பெற்றுக்கொள்ள உள்ளது.

| வேலை விபரம் | மாவட்டம் | தகுதி | பாதுகாப்புத் தொகை (Rs.) |
|---|---|---|---|
| கடறகரை வீதி, முல்லைத்தீவு 0.00 - 1.75 Km) (தார் ஊற்றி கல்லுப் பரவுதல் DBST) | முல்லைத்தீவு | M6 அல்லது அதற்கு மேல் (வீதி நிர்மாணம்) | 120,000 |
| நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலக நிர்மாணம் | முல்லைத்தீவு | M6 அல்லது அதற்கு மேல் (வீதி நிர்மாணம்) | 120,000 |

கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் நடைமுறை 27.03.2006 அன்று பிற்பகல் 2.00 மணியுடன் முடிவடையும்.

கேள்விப்பத்திரங்கள் தயாரிக்கப்படுவதற்குரிய படிவங்களைப் பின்வரும் காரியாலயங்களில் இருந்து பெற்றுச் சமர்ப்பிக்கவேண்டும்.

| அலுவலகம் | தொலைபேசி இலக்கம் | மின்னஞ்சல் |
|---|---|---|
| மாகாணப் பணிப்பாளர் வ-கி (வ)<br>வீதி அபிவிருத்தி அதிகார சபை,<br>கண்டி வீதி,<br>வவுனியா | 024-2222826 | rdanorth@sltnet.lk |
| பிரதம பொறியியலாளர்,<br>வீதி அபிவிருத்தி அதிகாரசபை,<br>155ஆம் கட்டை,<br>கிளிநொச்சி. | 021-2285724 | |

கேள்விப் பத்திர ஆவணங்கள் 04.03.2006 தொடக்கம் 25.03.2006 வரை மீளளிக்கப்பட முடியாத வைப்புத்தொகையான 1,725.00 (பெறுமதி சேர்வரி உள்ளடங்கலாக) செலுத்துவதன் மூலம் விநியோகிக்கப்படும்.
முன் கேள்வி கோரல் கூட்டம் 20.03.2006 இல் பிரதம பொறியியலாளர் அலுவலகம், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, 155ஆம் கட்டை, கிளிநொச்சியில் காலை 10.00 மணிக்கு நடைபெறும்.

01. நிறைவேற்றும் காரியாலயம் வீதி அபிவிருத்தி அதிகாரசபையே ஆகும்.

02. தகுதி வாய்ந்த கேள்வி கோருபவர்கள் பின்வரும் தகைமைப் பிரமாணங்களிற்கு இணங்குதல் வேண்டும்.

அ) கேள்வி கோருபவர் தன்னை இக்ராட் (ICTAD) நிறுவனத்தில் பெருந்தெருக்கள் மற்றும் கட்டட நிர்மாணத்தில் மேல் வேலைகளுக்கு எதிரே குறிப்பிட்டுள்ள தாங்கள் அல்லது அதற்கு மேல் தற்பொழுது பதிவு செய்திருத்தல்வேண்டும்.

ஆ) கேள்வி கோருபவர் இலங்கை தேசிய நிர்மான சங்கத்தில் (NCASL) செல்லுபடியாகும் ஒழுங்கான உறுப்புரிமையை கேள்வி கோரல் படிவம் பெற்றுக்கொள்ளும் பொழுதும் ஒப்பந்தத்தை வழங்கும் பொழுதும் கொண்டிருத்தல் வேண்டும்.

03. கேள்வி கோரல் ஆவணங்களை மாகாணப் பணிப்பாளர் வ-கி(வ) வீதி அபிவிருத்தி அதிகாரசபை, வவுனியா அல்லது பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, 155ஆம் கட்டை, கிளிநொச்சி அலுவலகங்களில் எதுவித கட்டணங்களும் இன்றி பார்வையிட முடியும்.

04. கேள்விப்பத்திரங்கள் கேள்வி கோரல் முடிவு திகதியில் இருந்து 120 கலண்டர் நாட்கள் வரை செல்லுபடியாக இருக்கும்.

05. கேள்விப்பத்திரங்கள் மேலே தரப்பட்ட வேலைகளிற்கு எதிராகக் குறிப்பிடப்பட்டுள்ள பாதுகாப்புத் தொலைகளுக்கு உரிய பாதுகாப்புப் பத்திரங்களையும் கொண்டிருக்கவேண்டும்.

ஏற்றுக்கொள்ளக்கூடிய பாதுகாப்புப் பத்திரங்களைக் கொண்டிராத கேள்வி கோரல்கள் நிராகரிக்கப்படும். கேள்விப் பத்திரங்கள் குறிப்பிட்ட முடிவுறும் நேரத்தின் பின்பு உடனடியாக மாகாணப் பணிப்பாளர் வ-கி(வ) வீதி அபிவிருத்தி அதிகாரசபை அலுவலகத்தில் திறக்கப்படும்.


கேள்வி கோருபவர்கள் அல்லது அவர்களது பிரதிநிதிகள் கேள்விப்பத்திரம் திறக்கும் நேரம் பிரசன்னமாக இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலதிக விபரங்களிற்குத் தயவுசெய்து பின்வரும் அலுவலகங்கள், தொலைபேசி இலக்கங்கள் மின் அஞ்சல் முகவரிகள் மூலம் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

| அலுவலகம் | தொலைபேசி இலக்கம் | மின்னஞ்சல் |
|---|---|---|
| மாகாணப் பணிப்பாளர் வ-கி (வ),<br>வீதி அபிவிருத்தி அதிகார சபை,<br>கண்டி வீதி,<br>வவுனியா. | 024-2222826 | rdanorth@sltnet.lk |
| பிரதம பொறியியலாளர்,<br>வீதி அபிவிருத்தி அதிகாரசபை,<br>155ஆம் கட்டை,<br>கிளிநொச்சி. | 021-2285724 | |

**மாகாணப்பணிப்பாளர் வ/கி(வ),**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை,**
**கண்டிவீதி, வவுனியா.**

(சி-14104)



பிரதமர் மன்மோகன் சிங்குடன் இணைந்து டில்லி நிருபர்களை வியாழக்கிழமை சந்தித்த அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் கேள்விக்குப் பதில் அளிக்கிறார்.

# இந்தியா–அமெரிக்கா இடையே அணுவிசை ஒத்துழைப்பு உடன்பாடு

இந்தியா- அமெரிக்கா இடையே அணுவிசை ஒத்துழைப்பு உடன்பாடு எட்டப்பட்டுவிட்டது என்று பிரதமர் மன்மோகன் சிங், அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் ஆகியோர் வியாழக் கிழமை அறிவித்தனர்.

அதன்படி, இந்தியாவிலுள்ள 14அணுமின் நிலையங்கள் சர்வதேச அணுவிசை அமைப்பின் கண்காணிப்பு மற்றும் பாதுகாப்புக்கு உட்படுத்தப் படும். ஆனால் இந்தியாவின் அதிவேக அணுசக்தித்திட்டங்கள் எதுவும் சர்வதேச அமைப்பின் கண்காணிப்பு மற்றும் ஆய்வுக்கு உட்படுத்தப்பட மாட்டாது என்று அரசு உயர்நிலை வட்டாரங்கள் தெரிவித்தன. இந்தியாவில் எதிர்காலத்தில் அமைக்கப் படும் அணுமின் நிலையங்கள் மின்னுற்பத்திக்கானதா அல்லது இராணுவ நோக்கத்துக்கானதா என்பதை முடிவு செய்யும் உரிமை இந்திய அரசுக்கே உண்டு. அதில் எவ்வித விவாதத்துக்கும் இடம் கிடையாது.

இந்தியாவிலுள்ள 22 அணு மின் நிலையங்களில் எவையெல்லாம் ஆக்கப் பணிகளுக்கானவை என்பதை வகைப்படுத்தும் பணியானது படிப்படியாக 2014ஆம் ஆண்டுக்குள் நிறைவேற்றி முடிக்கப்படும் என்று ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

முற்றிலும் மின் உற்பத்திக்கென அமைக்கப்படும் அணுமின் நிலையங்களை சர்வதேச கண்காணிப்பு மற்றும் பாதுகாப்புக்கு உட்படுத்துவதில் இந்தியாவுக்குப் பிரச்சினை ஏதும் இல்லை. ஆனால், அவற்றுக்கான எரிபொருள் கிடைப்பதை அமெரிக்கா உறுதி செய்யவேண்டும். ஏற்கனவே தாராப்பூர் அணுமின் நிலையத்துக்கான எரிபொருளை அமெரிக்கா வழங்குவதில் பிரச்சினை ஏற்பட்டதைப்போன்று, எதிர்காலத்தில் பிரச்சினை ஏதும் ஏற்படக்கூடாது என்று பேச்சுவார்த்தையின் போது இந்தியத் தரப்பு வலியுறுத்தியது. அதை அமெரிக்கா ஏற்றுக்கொண்டது என்றும் அந்த அரசு உயர் வட்டாரங்கள் தெரிவித்தன.

## தமிழீழப் போக்குவரவுக்கழகம்
## பயணியர் பேருந்துப் பணி நேரமாற்றம்
### புதுக்குடியிருப்பு–முல்லைத்தீவு

புதுக்குடியிருப்பிலிருந்து காலை 8.00மணிக்கு முல்லைத்தீவு புறப்படும் பேருந்துப்பணி 2006.03.08 ஆம் நாளிலிருந்து பின்வரும் நேர ஒழுங்கிற்கு அமைவாக நடைபெறும் என்பதனை பொதுமக்களிற்கு மகிழ்வுடன் அறியத்தருகிறோம்.

**நேரஒழுங்கு**

**புதுக்குடியிருப்பு - முல்லைத்தீவு**

| புதுக்குடியிருப்பு | மந்துவில் | முள்ளிவாய்க்கால் | முல்லைத்தீவு |
|---|---|---|---|
| காலை 08.15 | 08.25 | 08.40 | 09.00 |

**முல்லைத்தீவு- புதுக்குடியிருப்பு**

| முல்லைத்தீவு | முள்ளிவாய்க்கால் | மந்துவில் | புதுக்குடியிருப்பு |
|---|---|---|---|
| மாலை 05.00 | 05.20 | 05.35 | 05.45 |

முகாமையாளர்,
தமிழீழப்போக்குவரவுக் கழகம்,
பேருந்துப்பகுதி,
முல்லைத்தீவு.

(சி-14110)

## தமிழீழப் போக்குவரவுக்கழகப் பேருந்துப்பணி
## பயணியர் பேருந்துப் புதியபணி
### முல்லைத்தீவு–புதுக்குடியிருப்பு

இப்பேருந்துப்பணி பொதுமக்களின் வேண்டுகைக்கிணங்க 2006-03-08 ஆம் நாளிலிருந்து பின்வரும் நேர ஒழுங்கில் நடைபெறும் என்பதனை பொதுமக்களிற்கு மகிழ்வுடன் அறியத்தருகிறோம்.

**நேரஒழுங்கு**

**புதுக்குடியிருப்பு - முல்லைத்தீவு**

| புதுக்குடியிருப்பு | மந்துவில் | முள்ளிவாய்க்கால் | முல்லைத்தீவு |
|---|---|---|---|
| காலை 07.45 | 07.55 | 08.10 | 08.30 |

**முல்லைத்தீவு- புதுக்குடியிருப்பு**


| முல்லைத்தீவு | முள்ளிவாய்க்கால் | மந்துவில் | புதுக்குடியிருப்பு |
|---|---|---|---|
| மாலை 06.00 | 06.20 | 06.35 | 06.45 |

முகாமையாளர்,
தமிழீழப்போக்குவரவுக் கழகம்,
பேருந்துப்பகுதி,
முல்லைத்தீவு.

(சி-14110)

## 45ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னையின் மடியில்
07 □ 07 □ 1957



அரக்கியின் பிடியில்
19 □ 01 □ 2006

அமரர்

## க.இலட்சுமணன் தேவர் (சின்னத்தம்பி)

அன்பிற்கும் பண்பிற்கும்
இலக்கணமாய்
பாசத்தின் உறைவிடமான
"சின்ன அண்ணன்"
அனைவரின் நேசத்துக்குரிய
"சின்னத்தம்பி"
எம் உயிர் கலங்க
எம் உள்ளம் பதைக்க
எம் உடல் நடுங்க
உன் துணையே உன்னை
அழித்தாளே।

அன்னாரின் அந்தியேட்டி கிரியைகள் 05.03.2006 ஞாயிற்றுக்கிழமை காலை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து இவ் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்:–
பிள்ளைகள், அப்பா
அம்மா, தம்பிமார்,
தங்கைமார், மைத்துனர்.

இல.56,
போ.க.பி.அனுமதி வழங்கும் அலுவலகம் அருகில்,
உதயநகர் கிழக்கு,
கிளிநொச்சி.

(7520)


தமிழ் ஒளியின் தாயகக் கலையகம்
உங்களையும் உலகோடு இணைக்கின்றது

ttn
தமிழ் ஒளி

தாயகத்திலிருந்து ஐரோப்பிய நாடுகளுக்கு தன் சேவையை வழங்கும்
தமிழ் ஒளியில் நீங்களும் பங்குபற்ற விரும்புகின்றீர்களா?

உணர்வும் துடிப்பும், உறவுகளைத் தேடி, இன்னும் பல
புதிய நிகழ்ச்சிகள் உங்களுக்காக..



உறவுகளைத் தேடி
ஐரோப்பிய நாடுகளில் புலம் பெயர்ந்து வாழும் உங்கள் உறவுகளுடன் எமது தொலைக் காட்சி மூலம் குடும்பமாகப் பங்குபற்றி உங்கள்பாசத்தைப்பகிர்ந்து கொள்ளலாம்.

உணர்வும் துடிப்பும்
பாடசாலை, தனியார் கல்வி நிலைய மாணவர்கள் மற்றும் நிறுவன பணியாளர்கள் என்ற வகையில் 6 – 8 அங்கத்தவர் கொண்ட இளைஞர், யுவதிகள் ஒரு குழுவாகப் பங்கு பற்றலாம்.

கவிதா நிகழ்வு
உங்கள் உணர்வின் வரிகளுக்கு தமிழ் ஒளியூடாக உயிர் கொடுங்கள்.

தொடர்புகட்கு
அனைத்துலக தமிழ் ஊடகங்களின் இணையம்
(நந்தவனம் அருகாமை) கிளிநொச்சி.
தொலை பேசி. இல – 021 2285911

(சி-13999)

## இல்ல மெய்வன்மைப் போட்டி

வட்டக்கச்சி தெற்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைத் திறனாய்வுப் போட்டி வித்தியால முதல்வர் க.உதயக்கண்ணன் தலைமையில் இடம்பெற்றது.தேசியக் கொடி ஏற்றலுடன் ஆரம்பமான நிகழ்வில் அலைமகள்,கலைமகள் என இரண்டு இல்லங்களாக பிரிக்கப்பட்டு விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெற்றன.

இதில் அலைமகள் இல்லம் 251 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தையும், மலைமகள் இல்லம் 211 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன. முதன்மை விருந்தினராக உதவிக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல், கௌரவ விருந்தினராக கண்ணிவெடி அகற்றும் பிரிவைச் சேர்ந்த கனிச்செல்வி ஆகியோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (12)




## கிளிநொச்சி மத்தியகல்லூரியின் வருடாந்தமெய்வன்மைப் போட்டி



கிளிநொச்சி மத்தியகல்லூரி இல்ல மெய்வன்மைப் போட்டி கடந்த புதன்கிழமை பாடசாலை மைதானத்தில் வெகுசிறப்பாக நடைபெற்றுள்ளது. பாடசாலை முதல்வர் இ.இராஜமகேந்திரன் தலைமையில் பிற்பகல் 1.30 மணிக்கு நிகழ்வுகள் ஆரம்பமானது. முன்னதாக பாடசாலை மண்டபத்தில் இருந்து பாண்ட்வாத்திய இசைஅணிவகுப்புடன் விருந்தினர்கள் மைதானத்துக்கு அழைத்துவரப்பட்டனர். இந்நிகழ்வில் தமிழீழ தேசியக்கொடியை தமிழீழ நிதித்துறையின் மனித வள மேம்பாட்டுப்பகுதி பொறுப்பாளர் விபுலேந்திரன் ஏற்றிவைத்தார். மங்கலவிளக்கை பாடசாலை அபிவிருத்திச்சங்கச் செயலாளர் திருச்செல்வன் ,மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் நளன், பழையமாணவர் சங்க செயலாளர் கோகுலேஸ் ஆகியோர் ஏற்றிவைத்தனர் போட்டியின் ஒலிம்பிக்சுடரை சிறப்புவிருந்தினரும் கிளி.மாவட்ட வைத்திய அதிகாரியுமான சதாநந்தன் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து போட்டிகள் ஆரம்பமானது போட்டியில் முதலாம் இடத்தை இளங்கோ, இரண்டாம் இடத்தை வள்ளுவர்,மூன்றாம் இடத்தை கம்பன். நான்காம் இடத்தை பாரதி ஆகிய இல்லங்கள் பெற்றுக் கொண்டன. நிகழ்வின் ஆசியுரையை பிரதிக்கல்விப்பணிப்பாளர் பத்மநாதன் ஆற்றினார். சிறப்புரைகளை கல்விக்கழக துணைப் பொறுப்பாளர் அருண்,மாவட்டவைத்திய அதிகாரி சதாநந்தன் பிரதிக்கல்விப்பாணிப்பாளர் பத்மநாதன் ஆகியோர் நிகழ்த்தினர். போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான சான்றிதழ் வழங்கலுடன் நிகழ்வு நிறைவடைந்தது. (லோ.தீ)

## சிநேகபூர்வ கால்பந்துபோட்டி ஜேர்மனி, பிரான்ஸ் அதிர்ச்சித்தோல்வி

கால்பந்து பயிற்சி ஆட்டத்தில் இத்தாலி அணி 4-1 என்ற கோல் கணக்கில் ஜேர்மனியை வீழ்த்தியது.

நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்படும் உலகக் கோப்பை கால்பந்து போட்டிஜேர்மனியில் வரும் ஜூன் 9 ஆம் திகதி தொடங்குகிறது 32 நாடுகள் பங்கேற்கும் இந்தப் போட்டி ஜூலை 9 ஆம் திகதி வரை நடக்கிறது.

இந்த நிலையில் உலகக் கோப்பை போட்டிக்கு தகுதி பெற்ற நாடுகள் தங்களை தயார்படுத்திக் கொள்ளும் விதத்தில் வெவ்வேறு நாடுகளுடன் பல்வேறு இடங்களில் பயிற்சி ஆட்டத்தில் ஈடுபட்டுவருகின்றன.

இதில் புளோரென்சில் நடந்த ஆட்டத்தில் உலகக் கோப்பை போட்டியை நடத்தும் ஜேர்மனி, இந்த போட்டிக்கு தகுதி பெற்றஇத்தாலி அணியை சந்தித்தது.

இதில் ஜேர்மனி அணி 1-4 என்ற கோல் கணக்கில் இத்தாலியிடம் தோல்வி கண்டது.1939ஆம் ஆண்டுக்கு பின்னர் பயிற்சிஆட்டம் ஒன்றில் ஜேர்மனி பெற்ற மோசமானதோல்வி இதுவாகும்.

மற்றொரு பயிற்சி ஆட்டத்தில் போர்த்துக்கல் அணி 3-0 என்ற கோல் கணக்கில் சவூதிஅரேபியாவை தோற்கடித்தது. போர்த்துக்கல் வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ இரண்டு கோல் அடித்து அணியின் வெற்றிக்கு பக்கபலமாக இருந்தார்.

இன்னொரு ஆட்டத்தில் உலகக் கோப்பை போட்டிக்குத் தகுதி பெற்ற சுவீடன் அணி 0-3 என்றகோல் கணக்கில் தகுதி பெறாத அயர்லாந்து அணியிடம் தோல்வியை சந்தித்தது.

மற்றொரு ஆட்டத்தில் குரோஷியா அணி 3-2 என்ற கோல் கணக்கில் போராடி ஆர்ஜெனடீனாவைத்தோற்கடித்தது.

இன்னொரு ஆட்டத்தில் இங்கிலாந்து அணி 2-1 என்ற கோல் கணக்கில் உருகுவேயை தோற்கடித்தது. ஸ்பெயின் அணி 3-2 என்ற கோல் கணக்கில் ஐவரிகோஸ்டை வெற்றிகண்டது.

பாரிசில் நடந்த பயிற்சி ஆட்டத்தில் பிரான்ஸ் அணி 1-2என்ற கோல் கணக்கில் சுலோவாக்கியாவிடம் அதிர்ச்சித் தோல்வி கண்டது.

## கங்குலி மீதான குற்றச்சாட்டு சப்பலுக்கு பி.சி.சி. ஐ எச்சரிக்கை



கங்குலி மீது கூறப்பட்ட குற்றச்சாட்டுகள் விவகாரத்தில் இந்திய அணியின் பயிற்சியாளர் கிரேக் சப்பலுக்கு எச்சரிக்கை விடுக்க இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை (பி.சி.சி.ஐ) முடிவு செய்துள்ளது.நாக்பூரில் வியாழக்கிழமை இத் தகவலைத் தெரிவித்த இந்திய கிரிக்கெட் சபையின் செயலர் நிரஞ்சன் ஷா, அணியின் நலனுக்கு சம்பந்தமில்லாத சர்ச்சைகளை ஏற்படுத்தும் விதமாக பேச்சுக்களைத் தவிர்க்கவும் சப்பலுக்கு அறிவுறுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது என்றார். லண்டனில் இருந்து வெளிவரும் "தி.கார்டியன்"இதழுக்கு சப்பல் அளித்த பேட்டி கங்குலியை இழிவுபடுத்தும் வகையில் அமைந்துள்ளது. அதில் கங்குலி மீது பல்வேறு குற்றச்சாட்டுகளை சப்பல் கூறியிருந்தாலும் வாழ்க்கைக்கும், பணத்தேவைக்கும் தலைவர் பதவி எனக்கு அவசியம் என கங்குலி தெரிவித்ததாக சப்பல் வெளியிட்ட கருத்து விஸ்வரூபம் எடுக்கக் காரணமாகியுள்ளது. இதனால் கங்குலி வேதனை அடைந்துள்ளதாக தெரிகிறது.

## 1000 விக்கெட்டைக் கைப்பற்றி முரளி சாதனை



சர்வதேச கிரிக்கெட் உலகில் ஆயிரம் விக்கெட்டுக்களைக் கைப்பற்றி முத்தையா முரளிதரன் சாதனை படைத்துள்ளார்.

டெஸ்ட் மற்றும் ஒரு நாள் போட்டிகளில் சேர்த்து மொத்தம் 1000 விக்கெட்டுகளை அவர் வீழ்த்தியுள்ளார். பங்களாதேசத்துக்கு எதிரான முதல்டெஸ்ட் போட்டி தொடங்குவதற்கு முன்பு டெஸ்ட் போட்டியில் 584 விக்கெட்டுக்கள், ஒருநாள் போட்டியில் 411 விக்கெட்டுகள் என மொத்தம் 995 விக்கெட்டுகளை வீழ்த்திய முரளி பங்களாதேஷிற்கு எதிரான முதல் டெஸ்ட்டின் முதல் இனிங்சில் மூன்று விக்கெட்டை கைப்பற்றி முரளிதரன் இரண்டாவது இனிங்சில் ஆறு விக்கெட்டுகளை சாய்த்தார். இதன் மூலம் அவர் தற்போது மொத்தம் 1004 விக்கெட்டுக்களை வீழ்த்தி யுள்ளார். 1000 ஆவது விக்கெட்டாக பங்களாதேஷ் வீரர்காலித் மசூத்தின் விக்கெட்டை கைப்பற்றினார்.

## இங்கிலாந்து வீரர்கள் அபாரப் பந்து வீச்சு கைப், கும்ளே ஆட்டத்தால் மீண்டது இந்தியா

இந்திய-இங்கிலாந்து அணிகளுக்கிடையில் நாக்பூரில் நடைபெற்றுவரும் முதலாவது டெஸ்ட் போட்டியில் கைப், அனில் கும்ளே ஆகியோரின் சிறப்பான ஆட்டத்தால் இந்திய அணி ஸ்திர நிலையை அடைந்துள்ளது.

இங்கிலாந்து முதல் இனிங்சில் பெற்ற 393 ஓட்டங்களுக்குப் பதிலளித்து தனது முதலாவது இனிங்சை ஆடும் இந்தியா ஜபார், ராவிட் இணையால் வலுவான அடித்தளத்தை இட்டிருந்தபோதும் மூன்றாம் நாளான நேற்று 190 ஓட்டங்களுக்கு ஏழு விக்கெட்டுக்களை இழந்து பெருத்த நெருக்கடியைச் சந்தித்தது.

இந்த நிலையில் பொறுமையாக ஆடிக்கொண்டிருந்த கைப்புடன் இணைந்த அனில் கும்ளே வலுவான அடித்தளம் ஒன்றை






அணிக்கு வழங்கி மோசமான நிலையிலிருந்து அணி மீட்டெடுத்தார்.

நேற்றைய ஆட்டநேர நிறைவில் இந்தியா ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 322 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. துடுப்பாட்டத்தில் கைப் 91, கும்ளே 58 ஜபார் 81, ராவிட் 40 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்து வீச்சில் கொக்காட் ஐந்து விக்கெட்டுக்களையும், பனிசர் இரண்டு விக்கட்டுக்களையும், பிளிண்டொப் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இன்று போட்டியின் நான்காம் நாளாகும்.



## சிட்டஹொங் டெஸ்ட் கிரிக்கெட் போட்டி சிறிலங்காவுக்கு எட்டு விக்கெட் வெற்றி

பங்களாதேஷ் சிறிலங்கா அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டியில் சிறிலங்கா அணிஎட்டு விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றுள்ளது.

பங்களாதேஷ் சிட்டஹொங்கில் நடைபெற்ற மேற்படி போட்டியில் நாணயச்சுழச்சியில் வெற்றி பெற்ற பங்களாதேஷ் முகமட் அஷ்ரபுலின் 136 ஓட்டத்துணையுடன் 319 ஓட்டங்களைப் பெற்றது .

பந்து வீச்சில் லசித்த மாலிங்க நான்கு விக்கெட்டுக்களையும்,முரளிதரன் மூன்று விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். பதிலுக்கு தனது முதலாவது இனிங்சில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 338 ஓட்டங்களை பெற்றது. மஹ்ரூப் 72 ஓட்டங்களைப் பெற்றார்.





பந்து வீச்சில் குசைன் நான்கு விக்கெட்டுகளையும்,ரபிக் ,இனாமுல்ஹக் தலா இரண்டு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பின்னர் இரண்டாவது இனிங்சை ஆடிய பங்களாதேஷ் முரளிதரனின் பந்துவீச்சை சமாளிக்க முடியாது 181 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டையும் இழந்தது முதலாவது இனிங்சில் சிறிலங்காவுக்கு சவால் அளித்த பங்களாதேஷ் இரண்டாவது இனிங்சில் எதிர்பார்த்த ஆட்டத்தை எடுக்க முடியவில்லை. இதனால் சிறிலங்காவின் வெற்றி இலக்கு எளிதாக அமைந்தது.

163 ஓட்டங்களை பெற்றால் வெற்றி என்ற நிலையில் ஆடிய சிறிலங்கா இரண்டு விக்கெட்டுகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

துடுப்பாட்டத்தில் வாண்டெட் ஆட்டமிழக்காது 64 ஓட்டங்களையும், சங்கக்கார 46, ஜெயவர்த்தன ஆட்டமிழக்காது23 ஓட்டங்களைப் பெற்றனர். போட்டியின் நாயகனாக 136 ஓட்டங்களை பெற்ற பங்களாதேஷின் அஷ்ரப்புல் தெரிவானார்.

இரு அணிகளுக்குமிடையிலான இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டி எதிர்வரும் எட்டாம் திகதி நடைபெறவுள்ளது.

## சிந்தனைக்கு



சாவையும், அழிவையும், துன்பத்தையும் பரிசாகக் கொடுத்துத்தான் சுதந்திரம் எனும் சுவர்க்கத்தை நாம் காணமுடியும்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை, கிளிநொச்சி. 04.03.2006
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

# விதண்டா வாதம்!

ஜெனீவாப் பேச்சுவார்த்தையின் முடிவில் போர் நிறுத்த உடன்பாட்டில் திருத்தம்/ மாற்றம் மேற்கொள்ளப்பட்டது என்பது தற்பொழுது அரச தரப்பில் மேற்கொள்ளப்படும் பிரச்சாரமாகும். இப்பிரச்சாரத்தை பேச்சுவார்த்தையில் அரச தரப்புப் பிரதிநிதியாகக் கலந்து கொண்ட சட்டத்தரணி எச்.எல்.டி.சில்வா முன்னெடுப்பவராகவுள்ளார்.

அவரது வாதமானது ஜெனீவாவில் பேச்சு வார்த்தையின் முடிவில் வெளியிடப்பட்ட ஆவணம் யுத்த நிறுத்த உடன்பாட்டில் மாற்றம் செய்வதாக அமைகின்றது என்பதாகும். அதாவது இவ்அறிக்கையில் யுத்த நிறுத்த உடன்பாட்டில் காணப்படாத விடயங்கள் இடம் பெற்றுள்ளது என்பதும் அவை விடுதலைப்புலிகளைக் கட்டுப்படுத்துவதாகின்றது என்பதும் அவரது வாதமாகும்.

சிறிலங்கா அரச தரப்பில் இத்தகைய சிறுபிள்ளைத்தனமான வாதங்கள் ஏன் முன்வைக்கப்படுகின்றன? என்பது அனைவருக்கும் தெரிந்ததொன்றுதான். ஜெனீவாப் பேச்சு வார்த்தையில் அரசாங்கத்தரப்பு வெற்றியீட்டியுள்ளது. அரசாங்கத்தரப்பு கூறியதுபோன்று யுத்த நிறுத்த உடன்பாட்டில் மாற்றத்தைக் கொண்டு வந்துள்ளது எனப் பிரச்சாரம் செய்வதற்காகவே ஆகும்.

பேச்சுவார்த்தையில் அரசாங்கத்தரப்பு வெற்றியீட்டவில்லை என்பதற்கும் யுத்த நிறுத்த உடன்பாட்டில் மாற்றம் எதுவும் நிகழவில்லை என்பதற்கும், ஜாதிகஹெலஉறுமய தமக்கும் அரசிற்குமிடையிலான உடன்பாட்டின் படி பேச்சுவார்த்தை நடைபெறவில்லை எனக் கூறி அரசாங்கத்தைவிட்டு வெளியேறப்போவதாகவும், ஜே.வி.பி. மகிந்த சிந்தனைக்கு உட்பட்டதாகப் பேச்சுவார்த்தை அமையவில்லை எனக் குற்றம் சாட்டுவதுமே போதுமானதாகும்.

இது ஒருபுறமிருக்க ஜெனீவாப் பேச்சுவார்த்தை முடிவில் வெளியிடப்பட்ட அறிக்கையானது. விடுதலைப்புலிகளுக்கு மேலதிக காட்டுப்பாடுகளை விதிப்பதாக கூறுவதும் அர்த்தமற்றதொன்றாகும். ஏனெனில் பேச்சுவார்த்தை மேசையில் இருதரப்பிற்குமிடையில் ஏற்படும் இணக்கம் ஒருதலைப்பட்சமாக ஒரு தரப்பை மட்டும் காட்டுப்படுத்துவதாகக் கூறுவது அறியாத்தனமாகும்.

எடுத்துக்காட்டாக ஜெனீவாப்பேச்சுக்களில் இணக்கம் காணப்பட்ட விடயங்களில் சிறுவர் நலன் தொடர்பான விடயமும் ஒன்றாகும் இது யுத்த நிறுத்த உடன்பாட்டிற்கு உட்பட்டிருக்கவில்லை எனினும், அது விடுதலைப்புலிகளைத் தனித்தரப்பாக கட்டுப்படுத்தும் ஒன்றல்ல.

அதாவது இருதரப்பினரும் சிறுவர்களின் நலனைப்பேணுவதற்கு இப்பேச்சுவார்த்தையில் உத்தரவாதம் வழங்கியுள்ளனர். அவ்வாறானால் இது வரையில் விடுதலைப்புலிகள் மீதே சிறுவர்களைப் படையில் சேர்ப்பதாகக் குற்றம் சாட்டி வந்த அரசாங்கம் ஜெனீவா இணக்கப்பாட்டின் பிரகாரம் தானும் சிறுவர்உரிமைகளை மீறிச் செயற்பட்டதையும், சிறுவர் மீது அடக்குமுறையைப் பிரயோகித்தது என்பதையும், ஏற்றுக்கொள்வதாகவே அமையும். இதனை அரசாங்கத்தால் நிராகரிக்க முடியாது.

இன்னொரு எடுத்துக்காட்டையும் சுட்டிக்காட்டமுடியும். அதாவது வடக்கு கிழக்கில் இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதியில் துணை ஆயுதக் குழுக்கள் இல்லை என ஜெனீவாப் பேச்சுவார்த்தை வரை கூறிவந்த அரசாங்கத்தரப்பு ஜெனீவாவில் ஆயுதக்குழுக்களின் ஆயுதங்களை களைவதை ஒப்புக் கொண்டமையானது எவ்வாறு அரசின் நிலைப்பாட்டிற்கு வெற்றியாக முடியும்? இல்லாத ஒன்றை கட்டுப்படுத்தவோ அப்புறப்படுத்துவதாக எவ்வாறு ஒப்புக்கொள்ள முடியும்? இது எங்கப்பன் குதிருக்குள் இல்லை என்பது போன்றதாகாதா?.

ஆகையினால் ஜெனீவாப் பேச்சுவார்த்தையின் பின்னர் விடுக்கப்பட்ட அறிக்கை யுத்த நிறுத்தத்தில் மாற்றம் செய்துள்ளதாகவோ விடுதலைப்புலிகள் மீது கட்டுப்பாடுகளை விதிப்பதாகவோ அர்த்தப்படுத்துவதும் பிரச்சாரப்படுத்துவதும் உண்மைக்குமாறானது மட்டுமல்ல சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கும் விரோதமான நடவடிக்கையாகும்.


விடுதலைப்புலிகளுக்கும் சிறிலங்கா அரசாங்கத்திற்குமிடையில் செய்து கொள்ளப்பட்ட இவ்யுத்தநிறுத்த ஒப்பந்தம் ஓர் உயர் மட்ட ஒப்பந்தமாகும் அதாவது இரு உயர் தலைவர்கள் இடையில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தமாகும். இவ் ஒப்பந்தத்தை மாற்றம் செய்வதோ அன்றி திருத்தம் செய்வதோ என்பது அதிகாரிகள் மட்டத்திலோ, அமைச்சர்கள் மட்டத்திலோ, அன்றி சட்டத்தரணிகள் மட்டத்திலோ செய்யக்கூடியவை அல்ல.

அவ் யுத்தநிறுத்த உடன்பாடுபற்றி அதாவது அமுலாக்கம் பற்றிப் பேசும் அமைச்சர்கள், அதிகாரிகள், துணைத்தலைவர்கள் அவ் உடன்பாட்டு விதிகளை அமுலாக்கம் செய்வது தொடர்பாகவும் உடன்பாட்டை மேம்படுத்துவது தொடர்பாக பேச்சுவார்த்தை மேசையில் இணக்கப்பாட்டிற்கு வரலாம்.

இதனைத் தவிர ஒரு பேச்சு வார்த்தை அதிகாரிகள் மட்டத்திலாயினும் சரி அமைச்சர்கள் மட்டத்திலாயினும் சரி அப்பேச்சு வார்த்தை முடிவில் இணக்கம் காணப்பட்ட விடயங்கள் தொடர்பாக கூட்டறிக்கைகள் விடுவது வழமையானது. புலிகளுக்கும் சிறிலங்காஅரசாங்கத்திற்கும் முன்னர் நடந்த பேச்சுக்களின் போதும் இது நடந்தது. அக்கூட்டறிக்கைகள் செய்துகொள்ளப்பட்டுள்ள யுத்த உடன்பாட்டை மேம்படுத்தும் வகையிலான இணைப்பாக இருக்க முடியுமே ஒழிய உடன்பாட்டை மாற்றி அமைத்து விடமாட்டாது.

அவ்வாறு மாற்றி அமைப்பதானால் உலகில் உச்சி மாநாடுகளில் எடுக்கப்படும் தீர்மானங்கள், முடிவுகளை அதிகாரிகள் மட்டத்தில் நடக்கும் பேச்சுவார்த்தை மூலம் அர்த்தமற்றதாகவும், செயலற்றதுமாக அல்லவா ஆக்கி விடமுடியும் ?

இவை ஒரு புறமிருக்க உடன்பாடுகள் மேற்கொள்ளப்படுவது பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற் காகவே ஒழிய எச்.எல்.டி. சில்வா போன்ற சட்டத்தரணிகள் விதண்டா வாதம் புரிவதற்காகவல்ல.




# சிறிலங்காவின் முழுமையான சுதந்திரம் வெளிநாட்டு தலைமீடுகளால் கிட்டவில்லை

## - சிறிலங்கா பிரதமர் ஆதங்கம்

(கொழும்பு)

சிறிலங்கா இன்னும் முழுமையாக சுதந்திரம் அடையவில்லை என சிறிலங்கா பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார் வெளிநாடுகளின் தலையீடுகள் இன்னும் சிறிலங்காவில் இருந்து முற்றாக அகற்றப்படவில்லை என்று அவர் குறிப்பிட்டுள்ளார்

கண்டியில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதமர் இந்தக் கருத்தைத் தெரிவித்துள்ளார்.

வெளிநாடுகள் தமது வசதி கருதி உருவாக்கிய நிர்வாகக் கட்டமைப்புக்களையே தற்போதும் கடைப்பிடிக்க வேண்டியுள்ளதாகவும் இதனால் பெரும் நெருக்கடிகள் ஏற்பட்டு வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்

சிறிலங்கா அரசாங்கம் அரசியலமைப்பிற்கு ஏற்ப நிர்வாக கட்டமைப்புக்களில் மாற்றங்களை மேற்கொள்வதன் மூலமே வெளிநாடுகளின் தலையீடுகளை தவிர்க்க முடியுமென்றும் அவர் கூறினார்.

சிறிலங்காவில் நடைமுறையிலுள்ள மாவட்டங்கள் மற்றும் மாகாணங்களை திருத்தி அமைக்க வேண்டுமென்றும் அதன் மூலம் ஆட்புல ஒருமைப்பாட்டை பாதுகாக்க முடியும் என்றும் ரட்ண சிறிவிக்கிரம நாயக்க வலியுறுத்தியுள்ளார்.

அரசியல் ரீதியாக சுதந்திரம் பெற்றுள்ள போதிலும் ஏனைய நாடுகளை பொருளாதார தேவைகளுக்காக தங்கியிருக்க வேண்டியுள்ளதாகவும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

(32)

# கட்டுநாயக்க விமான நிலைய தாக்குதல் வழக்கு எப்போது முடியுமென்பது கடவுளுக்குத்தான் தெரியும்

## - கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி

(கொழும்பு)

சிறிலங்காவின் கட்டுநாயக்க விமான நிலையம் தாக்கியழிக்கப்பட்ட வழக்கு எப்போது முடியும் என்பது கடவுளுக்குத்தான் தெரியுமென்று கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஐ.எம்.அபேரட்ண தெரிவித்துள்ளார்.

இந்த வழக்கின் விசாரணை நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்த வழக்கில் ஐவர் மீது குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

வழக்கு விசாரணையின்போது,தங்களின் கர்மவினைகளினாலேயே மக்கள் நீதிமன்ற வழக்குகளுடன் சம்பந்தப்படுகின்றனர்.சிலர் தங்களின் கர்மவினைகளினால் சாட்சியாளர்களாகின்றனர்.எனது கர்மவினை இந்த வழக்குகளை நான் விசாரணை செய்ய வேண்டியேற்பட்டுள்ளது என்று நீதிபதி ஐ.எம்.அபேரட்ண கூறினார்.

இந்த வழக்கின் சாட்சியாளர்கள் பற்றித் தெரிவித்த நீதிபதி,இருவாரங்களுக்கு ஒரு முறை நீதிமன்றத்திற்கு வருவதற்கு எந்தச் சாட்சியாளர்கள் முயல்வார்கள்.அவ்வாறு வந்து முழுநாளையும் நீதிமன்றத்தில் செலவிடும்போது அவர்களின் பிள்ளைகளை யார் பார்த்துக்கொள்வார்கள் குற்றச்சாட்டிற்கு இலக்கானவர்கள் மீது 311 குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன. இந்த வழக்கு எப்போது முடிவிற்கு வரும் என்பதை கடவுளே அறிவார் என்று நீதிபதிகூறினார். இந்த வழக்கு விசாரணையை எதிர்வரும் பத்தாம் திகதிக்கு நீதிபதி ஒத்திவைத்தார்.

# தமிழர் பிரச்சினைக்கு வெளிப்படையான தீர்வு; ஜெனீவாப் பேச்சுக்கள் சந்தர்ப்பத்தை அளித்துள்ளது

(கொழும்பு)

ஜெனீவாவில் சிறிலங்கா அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் இடம் பெற்ற முதலாவது சுற்றுப்பேச்சுவார்த்தை மூலம், வடக்கு கிழக்கு தமிழர் பிரச்சினைக்கு வெளிப்படையான ஒரு தீர்வினைக் காண்பதற்கான சந்தர்ப்பம் கிட்டியுள்ளதாக சிறிலங்காவின் சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

திஸ்ஸமகரகம தேசிய பாடசாலையில் இடம்பெற்ற வைபவமொன்றில் கலந்து கொண்டு பேசும்போதே சனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார். நாம் எவ்வாறு ஜெனீவாவில் இடம்பெற்ற பேச்சுக்கள் குறித்து கருத்து வெளியிட்டாலும் இந்த மாநாடு வடக்கு கிழக்கு பிரச்சினைக்குத் தீர்வினை ஏற்படுத்த ஒரு வழிசமைத்துள்ளது என்பதனை எவராலும் மறுக்கமுடியாது. வடக்கு கிழக்கில் ஜெனீவாப் பேச்சுக்களுக்கு முன்னர் இடம்பெற்றுவந்த ஆட்கடத்தல்கள், படுகொலைகள், படைக்கு சிறுவர்களைச் சேர்த்தல் போன்றன இந்தப் பேச்சுக்கள் மூலம் தவிர்க்கப்பட்டு அப்பகுதி மக்கள் ஓரளவு நிம்மதியுடன் வாழத்தொடங்கியுள்ளனர்.

வன்முறைகள் தவிர்க்கப்படும் என்று இரண்டு தரப்பினரும் உறுதியளித்துள்ளனர். இதன் மூலம் நாட்டின் சனநாயகம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இவைகள் வெற்றி கொள்ளப்படும்போது அதனை பிற்போக்குவாத சக்திகளால் ஜீரணிக்க முடியாதுள்ளது. இந்த நாட்டில் மக்கள் அனைவரும் சந்தேகம், அச்சம் என்பவற்றை மறந்து ஒரு சுபீட்சமான வாழ்வினை வாழவேண்டும். சகல இனமக்களும் கவலையின்றி நிறைந்த மகிழ்ச்சியுடன் வாழவேண்டும். மகிந்தவின் சிந்தனைகளிலும் நான் இதனை உறுதிப்படுத்தியுள்ளேன். அதனை எட்டுவதே எனது இலட்சியமும் கூட.

இதேபோல ஜெனீவாப் பேச்சுக்களை வெற்றியடையச்செய்த சகல தரப்பினருக்கும் இந்த நேரத்தில் நான் எனது இதயபூர்வமான நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன் எனவும் அங்கு மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

# போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் சுவீடன் தலைமைக்கும் எதிர்ப்பு

(கொழும்பு)

இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் புதிய தலைவராக சுவீடன் நாட்டவர் நியமிக்கப்பட்டதற்கும் ஜாதிக ஹெல உறுமய எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளர் ஓமல்பே சோபித தேரர் இது தொடர்பில் கூறியுள்ளதாவது, ஐரோப்பிய ஒன்றியத்தில் இடம்பெறாத நாடு நோர்வே. ஆனால் ஐரோப்பிய ஒன்றியத்தின் உறுப்பு நாடாக இருக்கிறது சுவீடன். சுவீடன் நாட்டவரை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவராக நியமித்திருப்பதன் மூலம் தமிழீழ விடுதலைப்புலிகளின் மீதான தடையை நீக்கி பாதுகாக்கும் முயற்சியில் நோர்வே ஈடுபட்டுள்ளது.

சிறிலங்கா அரசாங்கத்துடன் பேச்சுக்களை நடத்திய தமிழீழ விடுதலைப் புலிகள் குழுவினர் இன்னமும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் பயணம் மேற்கொண்டு நிதி சேகரித்துக் கொண்டிருக்கின்றனர் என்றார் ஓமல்பே சோபித தேரர்.

# சிறிலங்கா இராணுவ புலனாய்வாளர்கள்

# ஒட்டுக்குழுக்களின் கெடுபிடிகள் அதிகரிப்பு

## மட்டு. அரசியல் துறைப் பொறுப்பாளர் கண்டனம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரை அண்மித்த பகுதிகளின் சிறிலங்கா இராணுவ துணை ஆயுதக்குழுக்கள், இராணுவ புலனாய்வுத்துறையினரின் மக்கள் மீதான கொடுபிடிகள் அதிகாரித்துள்ளன என்று மட்டக்களப்பு மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் தயாமோகன் தெரிவித்துள்ளார்.

கருணா குழுவைச் சேர்ந்த மற்றொரு இளைஞர் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் சரணடைந்துள்ளதாகவும் அவர் விரைவில் திடுக்கிடும் தகவல்களை ஊடகவியலாளர்களிடம் தெரிவிப்பார் என்றும் தயாமோகன் தெரிவித்துள்ளார்.

கனடாவில் ஒலிபரப்பாகும் தமிழ்ச்சோலை வானொலிக்கு கடந்த செவ்வாய்க்கிழமை அளித்த நேர் காணலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். தயாமோகன் கூறியுள்ளதாவது; மட்டக்களப்பு நகரை அண்மித்த பகுதியில் இராணுவத் துணை ஆயுதக்குழுக்கள், இராணு வப் புலனாய்வுத்துறையினரின் மக் கள் மீதான கெடுபிடிகள் அதிகரித்துள்ளன. கடந்த சில நாட்களாக படைத்துணைக்குழுக்கள் மக்கள் மத்தியில் ஆயுதங்களுடன் நடமாடி மக்களை அச்சுறுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். மட்டக்களப்பு நகர்ப்பகுதியில் கச்சேரிக்கு முன்பாகவுள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கட்டடத்தில் சிறிலங்கா இராணுவத்துணைக்குழு ஒரு அலுவலகத்தைத் திறந்து தமது செயற்பாட்டைத் தொடங்க சிறிலங்கா இராணுவத்தினர் துணைபுரிந்துள்ளனர்.

ஜெனீவாப் பேச்சுவார்த்தைக்குப் பின்னர் இராணுவத் துணைக்குழுவினர் அலுவலகங்களை அமைத்து ஆயுதங்களுடன் மக்கள் மத்தியில் நடமாடி ஆயுதங்களை அலுவலகங்களுக்குள் வைத்திருக்கும் அளவிற்கு மட்டக்களப்பு நகர்ப்பகுதி தற்போது மாறியுள்ளது. சிறிலங்கா அரசாங்கமும் அரச படைகளும் இப்படித்தான் செயற்படுகின்றனவே தவிர ஜெனீவாப் பேச்சுவார்த்தைக்குப் பின்னர் மாற்றங்கள் எதுவும் ஏற்படவில்லை என்பதையே பார்க்க முடிகின்றது.

அண்மையில் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் சரணடைந்த கருணா குழு உறுப்பினர், ஜெனீவாப்பேச்சுக்களைக் குழப்பும் நோக்கில் தாக்குதலை நடத்துமாறு இராணுவப் படை அதிகாரி ஒருவர் தனது உறுப்பினர் ஒருவருக்கு பணித்து அனுப்பியதாக தெரிவித்திருந்தார்.

பேச்சுவார்த்தையைக் குழப்பி மீண்டும் போரைத் தொடங்க வேணடும் என்ற எண்ணமே சிறிலங்காப் படை உயர் அதிகாரிகளுக்கும், அரச தலைமைகளுக்கும் உள்ளன என்பதையே இது வெளிப்படுத்துகிறது.

ஜெனீவாப் பேச்சுவார்த்தையில் எட்டப்பட்ட தீர்மானங்களின் அடிப்படையில் இராணுவத்துணை ஆயுதக்குழுக்களிடமிருந்து ஆயுதங்கள் களையப்படும் என்பதை சிறிலங்கா இராணுவமோ, சிறிலங்கா அரசோ ஏற்பதாக இல்லை என்பதையே இது காட்டுகிறது. கருணா குழுவில் தற்போது 40 முதல் 60 வரையானோர் உள்ளதாக சரணடைந்த இளைஞர் தெரிவித்தார். அவர்களில் சிலர் இந்தியாவிலிருந்து வந்துள்ளனர். அவர்களில் முன்னாள் ஈ.என்.டி.எல்.எப் உறுப்பினர்கள். அவர்களை இந்தியாவிலிருந்து சிலர் தயார் செய்து அனுப்புகின்றனர். அவர்களுக்கு சிறிலங்கா அரசினால் ஆயுதங் கள் வழங்கப்பட்டன என்றும் அந்த இளைஞர் கூறினார். இந்நிலையில் மற்றொரு கருணா குழு உறுப்பினர் ஒருவர் எம்மிடம் சரணடைந்துள்ளார். அவர் பல திடுக்கிடும் தகவல்களை வெளியிட்டுள்ளார். அது குறித்து ஊடகவியலாளர் சந்திப்பை மிக விரைவில் நடத்த உள்ளோம் என்றார் தயாமோகன்.

## இ.தொ.கா–மகிந்த நேற்றிரவு சந்திப்பு

(கொழும்பு)

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகன் தொணடமான் தலைமையிலான குழுவினர் நேற்றிரவு சனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்திந்துள்ளனர்.

இந்தச் சந்திப்பின் போது மலையகத்தில் நிலவும் குறைபாடுகள், அபிவிருத்தி நடவடிக்கைகள், தோட்டப் பகுதிகளுக்கு வழங்கப்பட வேண்டிய மின்னிணைப்புக்கள் என்பன தொடர்பாக விரிவாக கலந்துரையாடப் பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

# யாழ். இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் நூற்றாண்டு விழா நிகழ்வுகள் நேற்றுக் காலை 9.45 மணிக்கு கல்லூரியின் குமாரசாமி மண்டபத்தில் பழைய மாணவர்சங்கத் தலைவர் பரமேஸ்வரன் தலைமையில் இடம் பெற்றது.

முதலில் பிரதம விருந்தினர்கள் மற்றும் பழைய மாணவர்களும் கல்லூரி வளாகத்தில் அமைந்துள்ள வைரவர் ஆலயத்தில் இருந்து ஊர்வலமாக பாண்ட்வாத்திய அணியுடன் அழைத்து வரப்பட்டார்கள் பிரதம விருந்தினர்




சிறப்பு விருந்தினர்களுக்கு பாடசாலை மாணவத்தலைவர்கள் சாரணர்கள். சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் தொண்டர்களின் அணிவகுப்பு மரியாதையும் வழங்கப்பட்டது.

இதனையடுத்து மங்கல விளக்கேற்றலைத் தொடர்ந்து தொடக்கவு ரையை கல்லூரி அதிபர் வீ. கணேசராசா நிகழ்த்தினார். பாடசாலையின் மூத்த உறுப்பினர்கள் கௌரவிக்கப்பட்டதைத் தொடர்ந்து அறிமுகவுரையை வ.ஸ்ரீசக்திவேல் நிகழ்த்தினார் நூற்றாண்டையொட்டி வெளியிடப்பட்ட நூல் வெளியீட்டைத் தொடர்ந்து வெளியீட்டுரையை யாழ்ப்பாணம் பல்கலைக்கழக பேராசிரியரும் மலர் ஆசிரியருமான கா.குகபாலன் நிகழ்த்தினார். (41)

## மாணவர்கள்....

அதிபரை அழைத்துச்சென்று மூன்று மணி நேரம் தடுப்பு விசார ணைகளில் படையினர் ஈடுபட்டனர். படையதி காரிகளாலும் படைப்புலனாய் வாளர்களாலும் அச்சுறுத்தப்பட்டமை போன்ற விடயங்கள் அனைத்தும் பாடசாலை சமூகத்தால் கண்காணிப்புக்குழுவுக்கு விசாரணைகளின் போது தெரிவிக்கப்பட்டது. இந்தச்சம்பவங்கள் குறித்த விடயங்கள் அனைத்தையும் கேட்டறிந்த கண்காணிப்புக்குழ பிரதிநிதிகள் படையினர் நடந்து கொண்ட முறை செயற்பட்ட விதம் தவறானது என பாடசாலை சமூகத்திடம் தெரிவித்துள்ளனர். இது குறித்து தாம் ஆராய்ந்து வருவதாகவும் கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது. மற்றும் பாடசாலை மாணவர்கள், அதிபர், ஆசிரியர்களுக்கு படையினரால் விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் குறித்து பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் நேற்றுக்காலை பாடசாலை சென்று நிலைமைகளை ஆராய்ந்ததுடன் படையனரின் செயற்பாடுகளுக்கு கடுமையான கண்டனத்தையும் தெரிவித்துள்ளார். (28)

## நோர்வே....

சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்தினார்கள். நோர்வேயின் பாராளுமன்றத்தில் நடைபெற்ற இச்சந்திப்பில் ஈழத்தமிழர்களின் நெருக்கடி சமாதான முயற்சிகள் குறித்து தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினரால் விளக்கமளிக்கப்பட்டது.

பாராளுமன்ற வளாகத்தில் நடைபெற்ற சந்திப்பில் சனநாயக கட்சியின் முக்கிய தலைவர்களான லைலாடோவி மற்றும் ஒட்சத்தர் ஆகியோர் பங்கேற்றனர்.

விடுதலைப்புலிகள் தரப்பில் தமிழீழ அரசியல்துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், காவல்துறைப்பொறுப்பாளர் பா.நடேசன், தளபதி கேணல் ஜெயம், சமாதானச்செயலகப்பணிப்பாளர் புலித்தேவன், சமா தானச் செயலகத்தைச்சேர்ந்த இளந்திரையன் உட்பட விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

விடுதலைப்புலிகளின் பேச்சுவார்த்தைக் குழுவினர் சுவிற்சர்லாந்து சென்று நாளை தாயகம் திரும்பவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஊடக....

முயற்சிகளுக்கும் ஒத்துழைப்பு வழங்குவதற்கு தனக்கு ஆதரவளிக்குமாறு சனாதிபதி அழைப்பு விடுத்ததற்கமைய அவருடன் இணைந்ததாக குறிப்பிட்டுள்ளார்.

சிறிலங்காவின் ஊடகத்துறைக்கான முதலாவது ஒம்புட்ஸ்மனாக நியமிக்கப்பட்டுள்ள இவர் ஊடகத்துறைக்கென புதிய ஒழுக்கக் கோவையினையும் தயாரிக்கவுள்ளதாகத் தெரிவித்துள்ளார். (32)

## திருமலையில்...

நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் இராணுவம் தெரிவித்துவந்தது.

ஆனால் இராணுவத்தினர்தான் போராளிகளைக் கடத்தினார்கள் என்பதற்கு கண்ணால் கண்ட சாட்சிகள் உட்பட மேலதிக ஆதாரங்களுடன் மீண்டும் கண்காணிப்புக் குழுவினருக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும். இது தொடர்பில் கண்காணிப்புக் குழுவினர் உரிய நடவடிக்கைகளை எடுப்பார்கள் என தாம் எதிர்பார்ப்பதாக எழிலன் தெரிவித்துள்ளார்.

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கு நாங்கள் விபரங்களைக் கொடுத்திருக்கின்றோம். சாட்சிகளை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் இன்று சந்திப்பார்களென திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி. எழிலன் கூறியுள்ளார்.

## கடற்படையின்....

வலிகாமம் வடமேற்கு கடற்பிரதேசத்தில் இடம் பெற்று வருகின்றன.

எனவே இப்பிரச்சினைகள் அனைத்துக்கும் முற்றுப்புள்ளி வைக்கப்படுதல் அவசியம் என்பதை வலியுறுத்தும் வகையிலும் கடற்படையினர் மேற்கொண்டு வரும் இத்தகைய அட்டூழியங்களுக்கு கண்டனம் தெரிவிக்கும் முகமாகவுமே வலிகாமம் தென்மேற்கு பிரதேச கடற்றொழிலாளர்கள் நேற்று தொடக்கம் காலவரையறையின்றிய பகிஷ்கரிப்புப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

வலிகாமம் வடமேற்குப்பிரதேசத்தினுள் அடங்கும் மாதகல், மாரீசன் கூடல், சீந்திப்பந்தல் பொயிட்டி, குசுமான்துறை, சகாயபுரம் ஆகிய இடங்களைச்சேர்ந்த சுமார் 600 வரையிலான கடற்றொழிலாளர்கள் படையினருக்கு எதிரான இப்பகிஷ்கரிப்புப்போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனால் இப்பகுதிகளிலுள்ள கடற்றொழில் கிராமங்கள் வெறிச் சோடி காணப்பட்டது. இந்தப் பகிஷ்கரிப்பு போராட்டம் காரணமாக இக்கிராமங்களின் செயற் பாடுகள் முடக்கமடைந்துள்ளன. (33)

## டோறாவால்....

தொழிலில் ஈடுபட்டுவந்தனர்.

இநநிலையில் நேற்றுமுன்தினம் கடற்றொழிலாளர்கள் கடற் றொழிலில் ஈடுபட்டிருந்தவேளை மிகவேகமாக வந்த சிறிலங்கா கடற்படை டோறாப்படகு மீன்பிடிப் படகை இடித்து சேதமாக்கியதோடு அதில் இருந்த தந்தை, மகன் ஆகிய இரு மீனவர்களில் மகனை கடற் படையினர் கடலில் தூக்கியெறிந்துள்ளனர்.

கடலில் தாழ்ந்த இவரை தந்தையார் உடனடியாக கடலில் பாய்ந்து மீட்டு கரைசேர்ந்துள்ளார். பாதிக்கப்பட்ட 50 அகவையுடைய பீற்றர் அமலதாஸ், 18 அகவையுடைய அமலதாஸ் விமல்ராஜ் ஆகிய இரு மீனவர்களும் யாழ்ப்பாணக்கடற்றொழிலாளர் சங்கத்தில் உடனடியாக முறைப்பாடு செய்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட மீனவர்களால் பொன்னாலை கடற்படை தலைமையகத்திற்கு சென்று இது தொடர்பாக முறையிட்டபோது அங்கு தமக்கு பாஸ் அனுமதி மட்டும் வழங்கப் பணித்துள்ளதாகவும் மற்றைய கடல் சார்ந்த எந்த நடவடிக்கையும் தெரியாது எனத்தெரிவித்த மீனவர்களது முறைப்பாட்டை ஏற்கமறுத்துள்ளனர்.

## யாழ்.இல்....

இன்று மக்கள் மீதும், தமிழ் மாணவர்கள் மீதும், தமிழ் கல்வியியலாளர்கள் மீதும் உளவியல் ரீதியிலான யுத்தத்தினைத் தொடுத்து வருகின்றது. குறிப்பாக, தாம இழந்து விட்ட உரிமைக்காகப் போராடி வரும் தமிழ் மாணவர்கள் மீது தனது இராணுவக்கரங்களை பல்வேறு வடிவங்களைத் திணித்து வருகின்றது. ஒரு புறம் உயர்பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் பாடசாலைகளை ஆக்கிரமித்து தமிழ் மாணவர்களின் கற்றல் செயற்பாட்டிற்கு பெரும் தடையாக இருக்கும் ஆக்கிரமிப்பு இராணுவம் மறுபுறம், மாணவர்களை அடித்துத் துன்புறுத்துவதும் எமது கல்வியியலாளர்களை தனது இராணுவ முகாம்களிற்கு அழைத்து கொலை அச்சுறுத்தல்கள் விடுவதும் அதிகரித்தவண்ணமுள்ளது. 02-03-2006 அன்று காங்கேசன்துறை சிறிலங்கா ஆக்கிரமிப்பு படை முகாமிற்கு கல்வியியலாளர்களை அழைத்து அவர்களை அச்சுறுத்தியதுடன் பயமுறுத்தலினையும் சிறிலங்கா ஆக்கிரமிப்பு இராணுவத் தளபதி விட்டுள்ளமையானது மிகவும் மோசமாக சிவில் நிர்வாகத்தில் தலையிடுகின்ற அப்பட்டமான மனித உரிமை மீறலாகும். இதைவிட 24-02-2006 அன்று இளவாலை ஜங்ஹென்றீஸ் பாடசாலைச் சிறுவர்கள் நான்கு பேர் மிகவும் மோசமான முறையில் சிறிலங்கா கடற்படையினரால் தாக்கப்பட்டு அவர்களில் 13 வயது நிரம்பிய ஜேம்ஸ் நிரோசன் எனும் மாணவன் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். இதனைத் தொடர்ந்து இதற்கெதிராக குரல் கொடுக்க முற்பட்ட பாடசாலை அதிபரும், மாணவர்களும் ஆயுத முனையில் அச்சுறுத்தப்பட்டனர்.

கடந்த வாரம் பளை சென்று வந்த சாவகச்சேரி இந்துக்கல்லூரி மாணவர்களையும், ஆசிரியர்களையும் ஆயுத முனையில் அச்சுறுத்திய சிறிலங்கா இராணுவத்தினர் பாடசாலை அதிபருக்கும் கொலை பயமுறுத்தல் விட்டு வருகின்றனர். இவ்வாறான இராணுவத்தினரின் செயற்பாடுகள் மூலம் யாழ். குடாநாட்டு மாணவர்களின் அரசியல் எழுச்சியினையும் அவர்களின் இழந்துவிட்ட விடுதலையை பெறுவதற்கான அவாவினையும் ஒருபோதும் நிறுத்திவிட முடியாது என்பதனை சிறிலங்கா ஆக்கிரமிப்பு இராணுவத்தளபதிக்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

காலங்காலமாக ஆட்சிக்கு வந்த சிறிலங்கா அரசுகளினால் தமிழ் மாணவர்கள் புறக்கணிக்கப்பட்ட போதுதான் அவர்கள் அரசியல் ரீதியிலும் ஆயுத ரீதியிலும் சிறிலங்கா ஆக்கிரமிப்புக்கு எதிராகப் போராடப்புறப்பட்டார்கள். இதனை சிறிலங்கா இராணுவத் தளபதி உணர்ந்துகொள்ள வேண்டும். அதை விடுத்து தொடர்ந்தும் தமிழ் மாணவர்கள் மீது அழுத்தங்களைப் பிரயோகிக்க முற்பட்டால் யாழ். குடாநாடு எங்கும் சிறிலங்கா ஆக்கிரமிப்பு இராணுவத்தினருக்கு எதிராக மாணவர் போர் வெடிக்கும் என்பதனைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். இன்று நாம் சமாதானத்தின் மீதான விரக்தியின் விளிம்பிலும், எமது விடுதலையின் நம்பிக்கையின் வாசற்படியிலும் வந்து நிற்கும் வேளையில் சிறிலங்கா இராணுவத்தினரை சிந்தித்துச் செயற்படுமாறு வேண்டுகோள்விடுக்கின்றோம். இராணுவத்தினரின் இத்தகைய சிவில் நிர்வாகத்தில் தலையிடும் செயற்பாட்டினைக் கண்டித்தும் மாணவர்களும், கல்வியியலாளர்களும் அச்சுறுத்தப்படுவதனைக் கண்டித்தும் எதிர்வரும் திங்கட்கிழமை அன்று அனைத்துப் பாடசாலை மாணவர்களும் தமது கற்றல் செயற்பாடுகளை பகிஷ்கரிப்பதனூடாக சிறிலங்கா ஆக்கிரமிப்பு இராணுவத்தினருக்கு ஒரு செய்தியைக்கூற விரும்புகின்றோம். நாம் எமது அரசியல் உரிமையை நிலைநாட்டுவதற்காக எமது செயற்பாடுகளைத் தொடர்ந்து மேற்கொள்வோம். அதனைத் தடுக்க சிறிலங்கா ஆக்கிரமிப்பு இராணுவம் முற்படுமானால் யாழ. குடாநாடு எங்கும் சிறிலங்கா ஆக்கிரமிப்பு இராணுவத்தினருக்கு எதிராக மாணவர் புரட்சி வெடிக்கும் என்பதனைக் கூறி வைக்கின்றோம். (கீ)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2006 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 04 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.